ARCHUNA

# அர்ச்சுனா

சிறுவர்களுக்கான மாத இதழ்

50 ரூபா

கல்வி முயற்சி பெருவாழ்வு ஓக்ரோபர் 2011



சின்ன விடயங்கள்

உங்களால் முடியும்

சாதனை மாணவி

ரமேஷ் விதுஷ...

கடந்த புலமைப்பரிசில் பரீட்சையில் 192 புள்ளிகள் பெற்று யாழ் மாவட்டத்தில் முதலிடம் பெற்ற புனித ஜோன் பொஸ்கோ பாடசாலை மாணவி

எழுதுப் பழகுவோம்

உள்ளம் உவந்து அளிப்பதே உயர்ந்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

GATEWAY CfICT

UTHAYAN IT ISLAND

# GATEWAY CENTRE

FAST TRACK
TRAINING PROGRAMME

## We inspired We GATEWAY

- ICDL
- E - Citizen
- Advance ICDL Packages
- ASAP
- English for Life
- Diploma in Microsoft Office
- Diploma in Destop Publishing
- Diploma in Multimedia Graphic
- Diploma in Accounting Package
- Diploma in Hardware & Networking



CONTACT

- Luxmee Theatre Lane, Nelliyady.
  021 226 2395
- 1st Floor, New Market Buildind,
  Chavakacheri. 021 227 0323
- 347, Kasthuriyar Road,Jaffna.
  021 567 5555 / 021 222 7967

GATEWAY CfICT | GATEWAY Language Centre | GATEWAY KIDS School of Computing | IPICT International Pedagogical ICT Licence | ICDL | e-Citizen | e-TYPE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ARCHUNA

அன்புக்குரிய எங்கள் செல்வங்களே!

## நம்பிக்கையுடன் முன்னேறுங்கள்

அர்ச்சுனா உங்களின் நண்பன். அறிவையும் ஆற்றலையும் நீங்கள் நிரம்பப் பெற உங்கள் திறன்களை வெளிப்படுத்தி எழுதுங்கள். உங்கள் கைவண்ணங்களை எமக்கு அனுப்பி வையுங்கள். அர்ச்சுனா சிறுவர் வட்டத்தின் அங்கத்தவராகுங்கள். அர்ச்சுனா தரும் சொற்கோலத்தில் பங்கு கொண்டு உங்கள் திறமைகளை வெளிப்படுத்துங்கள் உங்களிடமிருந்து கவிதை கட்டுரை கதை ஆகிய ஆக்கங்களை அர்ச்சுனா ஆவலோடு எதிர்பார்க்கிறான். நாளைய உலகம் உங்களுடையது. இன்றைய நாள் ஒளிமயமானது. கடந்த நாள்கள் யாவுமே திரும்ப வராதெனினும் அவை கற்றுத் தந்த பாடங்கள் எமது தவறுகளைத் திருத்தவும் புதிய நல்ல பாதையைத் தேர்ந்தெடுக்கவும் வழிகாட்டும் என்ற நம்பிக்கையுடன் முன்னேறுவோம்.

ஆசிரியர்

## சிந்தனைக்குச் சில துளிகள்,


- உங்களது உயர்ச்சியைத் தீர்மானிப்பது உங்களது நடத்தையே தவிர உங்கள் தகுதி அல்ல.
- வாழ்வில் தோல்வி என்பதை உள்ளேவர நீங்கள் அனுமதிக்காத வரையில் என்றுமே தோல்வி ஏற்படாது.
- அதிர்ஸ்டம் என்பது வாழ்வில் சிறந்ததைப் பெறுவதென்பதல்ல உங்கள் வாழ்க்கைப் பயணத்தில் கிடைப்பவற்றில் சிறந்ததைத் தெரிவு செய்வதென்பதேயாகும்.
- உங்களது பலம் என்பது உங்கள் வேலையில் உங்களுக்குக் கிடைக்கும் கௌரவத்தில் தங்கி இருக்கவில்லை மாறாக உங்கள் வீட்டில் உங்களுக்கு எவ்வளவு அன்பு உள்ளது என்பதிலேயே தங்கியுள்ளது.
- மற்றவர்களின் தவறுகளைக் கண்டு கொள்வது சுலபம் ஆனால் ஒருவன் தனக்குள் இருக்கும் தவறுகளைக் கண்டு கொள்வது கடினம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# இனிய நண்பர்கள்





முன்னொரு காலத்தில் துணிச்சலான குதிரை வீரன் ஒருவன் இருந்தான் அவனுக்கு ஒப்பான வீரர்கள் எவருமே இலர். அவன் ஏழைகள் வலுவிழந்தோர் போன்றோருக்கு உதவுவதில் மிகுந்த விருப்பம் கொண்டிருந்தான். அவன் மீது அந்த நாட்டவர் அனைவருமே அன்பு கொண்டிருந்தனர்.


ஆனால் அவனிடத்தில் அவனது நண்பர்களுக்கே தெரியாத ஒரு இரகசியம் இருந்தது. அவனது தலையின் மொட்டைதான் அந்த இரகசியம். மொட்டையை மறைக்க அவன் தலையில் மறைக்க செயற்கையாக அமைத்த பொய்யான தலைமுடியை அணிந்திருந்தான்.




ஒரு நாள் அவன் தனது நண்பர்களுடன் வேட்டைக்குச் சென்றான் செல்லும் வழியில் பலத்த காற்று வீசியது அதனால் அவனது பொய்த் தலைமுடி காற்றில் எற்றுண்டு பறந்தது. மொட்டையான. அவனது தலையைக் கண்ட நண்பர்கள் ஆச்சரியமடைந்தனர். மொடடைத் தலையை இன்றுவரை மறைத்து வைத்திருந்த போர்வீரனை அவர்கள் கேலி செய்து சிரித்தனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



போர்வீரனோ அவர்களுடன் சேர்ந்து பலமாகச் சிரித்தான். தனது மொட்டைத் தலையை மறைக்க எடுத்துக்கொண்ட முயற்சிகளால் அவன் அடைந்த வேதனைகளை எடுத்துச் சொன்னான். "எனது சொந்த முடியோ என்னிடமிருந்து என்றோ தொலைந்து போய்விட்டது இப்பொழுது எனது தலையிலிருந்ததோ பொய்யான முடி அது பறந்து போனதைக் கண்டு நீங்கள் ஏன் சிரிக்கிறீர்கள். உண்மைகளை என்றுமே மறைக்க இயலாது" என்று கூறியவாறு அவன் புன்னகைத்தான்.





வீரனின் வார்த்தைகளிலிருந்து வெளிவந்த உண்மையைக் கேட்ட நண்பர்கள் வீரனின் மொட்டைத் தலையைப் பார்த்துத் தாம் கேலியாகச் சிரித்தமையை எண்ணி வருந்தினர் வெட்கப்பட்டனர். இயல்பாகவே நிகழும் மாற்றங்களைத் தடுக்க இயலாது. ஆனால் அவற்றை மறைப்பதற்கு முயன்றாலும் இயலாமலேயே போய்விடுகின்றது. நட்புக்கு ஏற்றத் தாழ்வுகளோ குறை கண்டு நகைக்கும் குற்றங் காண் நிலையோ இல்லை. ஆனால் வீரன் நண்பர்களோடு மகிழ்ச்சியாக இயற்கையின் ஆற்றலை மெச்சிச் சிரித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவலைப்படாதீர்கள்

காட்டில் பலசாலியான ஒரு சிங்கம் இருந்தது. ஆனால் அது எப்போது பார்த்தாலும் கவலைப்பட்டுக்கொண்டே இருந்தது.

எனக்கு இவ்வளவு பலம் இருந்தும் இரும்பு போன்ற நகங்களும் பற்களும் இருந்தும் என்ன உபயோகம்? கேவலம் இந்தக் காட்டுச் சேவல் கூவுகிற சத்தம் என்னை நடுங்கவைக்கிறது. இப்படிப் பயந்து கொண்டே வாழ்வது ஒரு வாழ்க்கையா? என்று தன்னைத்தானே நொந்து கொண்டே இருந்தது.

அதே சமயம் அங்கே ஒரு யானை வந்தது. அது மிகவும் கவலையுடன் தன் காதுகளை முன்னும் பின்னும் அடித்துக் கொண்டே நகர்ந்தது.

அதைப்பார்த்த சிங்கம் ஏய்... கரியே! உனக்கு என்ன கவலை? யாருமே உன்னை எதிர்த்துச் சண்டை செய்யமாட்டார்களே! உன் உடலைப் பார்த்தாலே எல்லா மிருகங்களும் பயந்து ஓடுமே... எதற்காக நீ கவலையோடு இருக்கிறாய்? என்று ஆச்சரியத்துடன் கேட்டது.

அதற்கு யானை, இதோ... என் காதின் பக்கத்தில் பறக்கும் குளவியைப் பார்த்தாயா? இது என் காதுக்குள் நுழைந்து கொட்டிவிட்டால், அவ்வளவுதான்... என் உயிரே போய் விடும்! அதற்காகத்தான் இது காதுக்குள் போய் விடாதபடி காதுகளை ஆட்டிக் கொண்டு கவலையோடு நடக்கிறேன்... என்றது.



அது கேட்டு சிங்கம் யோசித்தது. இவ்வளவு பெரிய உடம்பை வைத்து இருக்கும் யானைக்குக் கவலையே இருக்காது என்று நினைத்தால் அதுகூடக் கவலைப்படு கிறதே! அப்படியானால் பூமியில் இருக்கும் எல்லா உயிர்களுக்கும் ஏதாவது ஒரு கவலை இருக்கத்தான் செய்யும் போலிருக்கிறது!

கவலைப்படுவதால் வாழ்க்கை ஒன்றும் நமக்கேற்ற மாதிரி மாறப்போவதில்லை. அது மட்டுமல்லாமல் கவலைப்பட்டு கவலைப்பட்டு, நம் கண்ணெதிரே இருக்கும் மகிழ்ச்சியான விடயங்களில் ஈடுபட்டு வாழமுடியாமல் போய்விட்டதே! என்று அது எண்ணியது உண்மையைப் புரிந்து கொண்டது.

அன்றிலிருந்து அது கவலைப்படுவதை விட்டுவிட்டு மகிழ்ச்சியாக வாழத் தொடங்கியது!

■ மிகிரன்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொலித்தீன் பாவனையும் சூழல் பாதுகாப்பும்.



■ யூ.விஷாக்கா மிலேனியா
அங்கத்துவம் – 01

நவீன விஞ்ஞான கண்டுபிடிப்புக்கள் மனித வாழ்க்கையை இலகுவாக்கியுள்ளன என்பது மறுக்க முடியாத உண்மையாகும். பல கடினமான வேலைகளை அவை இலகுவாக்கியுள்ளன. அவற்றின் மூலம் பல அனுகூலங்களை நாம் பெற்றுக்கொண்டாலும் சில பிரதிகூலங்களும் உள்ளன. இப் பிரதிகூலங்கள் மனித வாழ்க்கையின் இருப்பையே கேள்விக்குறியாக்கிவிடுகின்றன.



பொருளாதார வளர்ச்சி அடைந்து வரும் இந் நாட்களில் பொலித்தீன் பாவனையானது வேகமாக அதிகரித்து வருகின்றது. பொருட்களைப் பொதி செய்வதற்கும் வேறு தேவைகளுக்காகவும் பொலித்தீன் பெருமளவு பயன்படுகிறது. ஒரு சுறு சுறுப்பான பலசரக்குக் கடையொன்றில் குறித்த நேரத்தில் பல அளவுகளுடைய பொலித்தீன் பைகளில் நுகர்வோருக்குப் பொருட்களை இட்டுக் கொடுப்பது ஒரு சாதாரண விடயமாகும். ஆனால் இப்பைகளுக்கு என்ன நிகழ்கின்றன என்பதை நாம் அறிவோமா?

வளர்ச்சி அடைந்த நாடுகளில் பொலித்தீன் கழிவுகளை மீள் சுழற்சி செய்து சுற்றுச் சூழலைப் பாதுகாக்கின்றனர். பொதுவாகப் பொலித்தீன் உக்கலடைய மாட்டாது. நம் நாட்டில் இவற்றை எரிப்பதன் மூலமே கழிவுகளை அகற்றுகின்றோம். இவற்றை எரியூட்டும் போது வெளிவிடப்படும் நச்சு வாயுக்களால் மனித இனத்திற்கும் சுழல் சமநிலைக்கும் தீங்குகள் ஏற்படுகின்றன. இலங்கையில் மீள் சுழற்சி என்பது பிரபல்யம் அடையாத ஒன்றாகவே உள்ளது.

இவை பற்றிப் பலவேறு அறிவுரைகள் விளக்கங்கள் மக்களுக்கு வழங்கப்படுகின்ற போதிலும் அவை அனைத்தும் செவிடன் காதில் ஊதிய சங்கொலியாகவே உள்ளன. சிறுவர்களாகிய நாம் இப் பாரிய ஆபத்தைக் குறைப்பதற்கு முன்வர வேண்டும். எமக்கு கிடைக்கின்ற பொலித்தீன் பைகளை நல்ல நிலையில் பேணி மீண்டும் அருகிலுள்ள கடைகளுக்குக் கொடுப்பதன் மூலம் இப் பொலித்தீன் கழிவுகள் பெருகுவதைத் தடுக்கலாம். அத்துடன் இதன் புதிய உற்பத்திக்கான செலவையும் அதன் போது ஏற்படும் சுற்றுச் சூழல் பாதிப்புக்களையும் குறைக்கலாம்.

இச் சுறுசுறுப்பான உலகத்தில் இந்தச் செயலை ஒரு பொழுது போக்காக கொள்வோமேயானால் பல பாரிய அனர்த்தங்களை தடுப்பதற்கான சிறிய ஆரம்பமாக இது அமையும் என்பது வெளிப்படை.

முயற்சி திருவினையாக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லப்பாம் டப்பாம் 05



கோவிலில் இருந்து வந்த நாதஸ்வர ஓசை லப்பாம் டப்பாமை சுண்டி இழுத்தது அவர்களுக்கு இருப்புக் கொள்ளவில்லை.

அம்மா கோயிலுக்குப் போகிறோம் என்று சொல்லிவிட்டுப் பதிலுக்குக் காத்திராமல் கோயிலை நோக்கி ஓடினர்.

அவர்கள் கோயிலை அடைந்த போது சுவாமி வீதிவலம் வந்து கோபுரவாசலில் தீபாராதனை நடந்து கொண்டிருந்தது.

சுவாமியைச் சுற்றி மேளக் கோஷ்டி மூன்று முறை சுற்றி வந்து மூன்றாம் முறை உபயகாரரிடம் தட்சணை வாங்குவதை உன்னிப்பாய் அவதானித்தார்கள்.

லப்பாமிற்குத் திடீரென ஒரு ஐடியா உதித்தது. இப்படியான சந்தர்ப்பங்களில் மட்டும் அவன் மூளை இயங்கும்.

சுருதிப்பெட்டியுடன் கடைசியாகச் சென்றவரின் பின் ஓடிப்போய் லப்பாம் தானும் சேர்ந்து கொண்டான். அவனைத் தொடர்ந்து டப்பாமும் மேளக் கோஷ்டியுடன் சேர்ந்து போனான். உபயகாரர் இவர்களையும் மேளக் கோஷ்டியைச் சேர்ந்தவர்கள் என நினைத்து தட்சணை கொடுத்தார்.

கையில் கிடைத்த இரண்டு ரூபா நாணயத்தைக் கண்டு இருவரும் பூரித்துப் போனார்கள். அடுத்த நாளும் அதற்கடுத்த நாளும் மேளக் கோஷ்டியுடன் சேர்ந்து பணம் பெற்றார்கள்.

மூன்றாம் நாள் லப்பாம் டப்பாம் எதிர்பாராத சம்பவம் நிகழ்ந்தது.

மேளக் கோஷ்டியுடன் சில்லறை வாங்கிக் கொண்டிருக்கையில் உபயகாரரின் வீட்டில் இருந்து அந்தச் செய்தி வந்தது.

உபயகாரரின் மகளின் வைர மோதிரம் தொலைந்து விட்டது. என்று வேலைக்காரன் தகவல் கொண்டு வந்தான்.

அன்று காலைதான் அதே கோயிலில் அவர் மகளுக்குத் திருமணம் நடந்தது. மோதிரம் காணாமற் போனது இப்போதுதான் தெரியவந்தது.

பதறிப் போனார் உபயகாரர். ஆட்களை விட்டு எல்லா இடங்களிலும் தேடினார். அவரும் அங்குமிங்கும் தேடினார். எங்கு தேடியும் அகப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போதுதான் லப்பாம் டப்பாம் ஞாபகம் அங்குள்ளவர்களுக்கு வந்தது. ஓடிப் போனார்கள் உபயகாரரிடம். “கவலையை விடுங்கோ. லப்பாம் டப்பாம் மோதிரத்தை மட்டுமின்றி எடுத்தவனையும் பிடிப்பாங்க” என்றார்கள்.

உபயகாரரின் பார்வை இருவர் மீதும் சென்றது முட்டாள்கள் போலத் தோற்றமளிக்கும் இந்தப் பெடியன்களா திருடினவனையும் மோதிரத்தையும் கண்டு பிடிக்கப் போகிறார்கள் என்று எண்ணினார்.

எனினும் அவர்களை நாடுவதைத் தவிர வேறு வழியில்லையென அவருக்குத் தோன்றியது.

இருவரின் கைகளையும் அன்புடன் பிடித்தார்.

சற்றுமுன் கொடுத்த சில்லறையைப் பறிக்கப் போகிறார் என நினைத்து இருவரும் மிரள மிரள விழித்தார்கள்.

“உங்களிருவரையும்தான் நான் நம்பியிருக்கிறேன். எப்படியும் மோதிரத்தைக் கண்டு பிடிச்சிடலாம்” என்றார்.

லப்பாம் டப்பாம் ஒன்றும் புரியாது விழித்தார்கள். மோதி ரம் தொலைந்த விடயமோ அதைத் தேடி ஆரவாரப்பட்டதோ அவர்களுக்குத் தெரியாது. கையில் கிடைத்த இரண்டு ரூபா நாணயத்தில் தங்களை மறந்து இருந்த போது உபயகாரர் இப்படிக் கேட்டார்.

இரண்டு பேரும் ஒருவரை ஒருவர் பார்த்தனர். என்ன சொல்வதென்று தெரியாது திகைத்து நின்றனர். பின்னர் தலையை ஆட்டி விட்டால் போதும் என்று எண்ணிய வாறு அவ்விடத்தை விட்டு ஓடினர்.

அவர்கள் போவதையே பார்த்துக்கொண்டிருந்த உபயகாரர் இந்தப் பேடிப் பெடியன்களா மோதிரத்தைக் கண்டுபிடிக்கப் போகிறார்கள் என்று எண்ணியவாறு மீண்டும் மோதிரத்தைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டார்.

**அமரர். வில்வம் பசுபதி**



பகல் திருவிழா முடிந்து எல்லோரும் போய்விட்டார்கள். லப்பாம் டப்பாம் மட்டும் வீதியில் கடலையைக் கொறித்தபடி நின்றார்கள். அவர்கள் பார்வை கோயில் வீதியில் நின்ற நெல்லிமரத்தின் மீது சென்றது. காய்த்துக் குலுங்கிய நெல்லிக்காய்கள் இவர்களை வா வா என்று அழைத்தன.



லப்பாம் அங்கும் இங்கும் ஒரு கணம் பார்த்தான். பின்பு மரத்தையும்! ஒரு கணம் பார்த்தான். குரங்கு போல் தாவி மரத்தில் ஏறினான். அவனைத் தொடர்ந்து டப்பாமும் ஏறினான்.

**கவலையை விடுங்கோ. லப்பாம் டப்பாம் மோதிரத்தை மட்டுமின்றி எடுத்தவனையும் பிடிப்பாங்க**

இருவரும் குரங்கு சப்புவது போல் நெல்லிக்கனிகளைச் சப்பித் துப்பினர். “டேய் வாய் புளிக்குது. பச்சைத் தண்ணி குடிச்சா இனிக்கும்” என்றான் லப்பாம்.

இருவரும் மரத்தில் இருந்து குதித்து கோயில் கிணற்றை நோக்கி ஓடினர்.

கிணற்றடியில் ராமு குளித்துக்கொண்டிருந்தான். அவன் கோயில் வேலையாள் எடுபிடி வேலை செய்பவன். இவர்களுக்குக் குடிக்கத் தண்ணீர் கொடுத்துவிட்டு குளிப்பதில் கவனம் செலுத்தினான்.

கிணற்றடியைவிட்டு வந்தபோது கிணற்றுக்கட்டில் இருந்த சவர்க்காரப் பெட்டியைக் கண்டான் லப்பாம். அப்படிப் பிளாஸ்டிக் பெட்டியை அவன் இதற்குமுன் பார்த்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தில்லை. அதை கையில் எடுத்துப் பார்க்க முற்பட்டபோது ராமு கண்டு "டேய்" என்று சத்தம் போட்டபடி குளிப்பதை நிறுத்தி விட்டு ஓடி வந்தான்.

அதிர்ச்சியடைந்த லப்பாம் பயத்தினால் ஓட்டம் பிடித்தான். அவன் கையில் சவர்க்காரப் பெட்டி இருந்தது. லப்பாமுடன் டப்பாமும் ஓடினான். இருவரையும் துரத்தியபடி ராமு ஓடினான்.

வீதியில் மணலைக் கிளறியபடி மோதிரத்தை தேடியபடி குனிந்துநின்ற உபயகாரர் நிமிர்ந்து பார்த்தர். உபயகாரரைக் கண்டதும் பயத்தினால் அவர் காலில் விழுந்தான் லப்பாம். அவன் கையில் இருந்த சவர்க்காரப் பெட்டி உபயகாரர் காலடியில் விழுந்தது. அதற்குள் இருந்த வைர மோதிரம் மின்னிக் கொண்டிருந்தது.

"ஐயா என்னை மன்னியுங்கோ" என்றபடி அவர் காலில் விழுந்த ராமு நடந்ததைச் சொன்னான்.

அன்று காலை திருமணவிழாவில் கிடாரம் நிறைய தண்ணீர் ஊற்றி மோதிரத்தை அதற்குள் போட்டுவிட்டு மணமக்களை அந்த மோதிரத்தை எடுக்கும்படி ஐயர் சொன்னார். அந்த மோதிரத்தை எடுக்கப் பெண்ணும் மாப்பிள்ளையும் கையைவிட்டுத் தேடிய போது பெண்ணின் கையில் இருந்த வைர மோதிரம் கிடாரத்தினுள் கழன்றுவிட்டது. இதை மணப்பெண் உடன் கவனிக்கவில்லை.

கிடாரத்தினுள் இருந்த அந்த மோதிரம் ராமுவின் கையில் சிக்கியது.

உபயகாரரும் ஊர்ச்சனங்களும் லப்பாம் டப்பாமின் துப்பறியும் மூளையினால் தான் மோதிரம் கிடைத்ததெனவும் ராமு அகப்பட்டானெனவும் எண்ணி இருவரையும் பாராட்டி மகிழ்ந்தனர்.



# குப்பை கொட்டாதீர்.




குப்பை கொட்டும் கூடை – அதிலே
குப்பை போட்டு வாரும்.
குப்பை எங்கும் தூவி – வீட்டை
குப்பை ஆக்க வேண்டாம்.

வெளியில் குப்பை கொட்டி – எங்கும்
வீசுங் காற்றின் தூய்மை
அழியச் செய்ய வேண்டாம் – கூடை
அதிலே குப்பை சேரும்.


வீதி எங்கும் குப்பை – நாற்றம்
வீசும் கொடுமை வேண்டாம்.
தீது இன்றி நாளும் – கூடை
திரட்டிக் குப்பை சேரும்.

கூடை சேர்ந்த குப்பை – வெட்டிக்
குழியில் இட்டுப் புதைப்பீர்.
நாடே உம்மைப் போற்றும் – நன்மை
நலங்கள் சேர உழைப்பீர்.

■ செ.மகேந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





■ தே. கஜார்த்தன்

# சின்னான் திருட்டு

திருட்டு வேலையில் பழக்கப்பட்டுப் போனான் சின்னான். அது ஓர் உற்சாகமான செயலாக அவனுக்குத் தோன்றியது. அதனால் திருட்டு அவனுக்குக் இயல்பாகிப் போனது. எவ்வளவு பெரிய வீடாக இருந்தாலும் எவரது கண்ணிலும் சிக்காமல் அங்கு உள்நுழைந்து பணம் பொருள் எல்லாவற்றையும் களவாடி வந்து விடுவான். சின்னான் ஒரு வீட்டில் கன்னம் வைக்க எண்ணினால் வெற்றிகரமாக அதனைச் செய்து முடித்துவிடுவான் என்றும் பெருமை பேசுவான். சின்னானுக்கு உதவியாகப் பொன்னன் என்ற இளைஞன் வந்து சேர்ந்தான். சின்னான் பொன்னனுக்குத் திருட்டுத் தொழிலில் உள்ள தந்திரங்களையெல்லாம் கற்றுக் கொடுத்தான். பொன்னன் சேர்ந்து செய்யும் களவுகளிலெல்லாம் உரிய பங்கைச் சின்னான் அவனுக்குக் கொடுப்பதில்லை. அதனால் பொன்னனுக்குச் சின்னான் மீது கோபம் இருந்தது. ஒருநாள் ஓர் ஆழமான கிணற்றின் அருகில் நின்று பொன்னன் துக்கத்தோடு "ஐயோ விழுந்து விட்டதே" எனப் புலம்பிக்கொண்டிருந்தான். அதைக் கேட்ட சின்னான் "என்ன விழுந்து விட்டது" ஏன் புலம்புகிறாய் என விசாரித்தான். அதற்கு அவன் "கிணற்றுக்கட்டில் வைத்திருந்த பொன் முடிச்சுத் தவறிக் கிணற்றில் விழுந்து விட்டது. எனக்கு நீந்தத் தெரியாதே" என்றான்.

சின்னான் "அதற்காகவா? புலம்புகிறாய் என்று சொன்னவாறு தன்னிடமிருந்த மோதிரம், சங்கிலி எல்லாவற்றையும் கழற்றி வைத்துவிட்டு சின்னான் கிணற்றினுள்ளே குதித்தான். கிணற்றினுள்ளே பொன்னன் வீழ்த்திய பொன் முடிச்சைத் தேடிப் பலமுறை சுழியோடி அலசினான். ஆனால் அது அவன் கையில் கிடைக்கவில்லை. சில மணி நேரம் முயற்சியின் பின்னர் கிணற்றை விட்டு மேலே வந்த சின்னானுக்குப் பயங்கர அதிர்ச்சி காத்திருந்தது. சின்னானின் பொருட்களோடு பொன்னன் அங்கிருந்து தப்பிச் சென்று விட்டான்.

தீமையைப் பயிற்றினால் தீமையே விளையும்.


தீட்டிய மரத்திலேயே கூர்பார்த்த கதையாகச் சின்னான் பயிற்றிய திருட்டுப் பயிற்சி அவனேயே பாதித்தது கண்டு வருந்தினான். அதன் பின்னர் சின்னான் திருட்டுத் தொழிலைக் கைவிட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ தொகுப்பு – ம.சாம்பவி






இந்த உயரத்திற்கு மேல் இக் கோபுரம் உயர்ந்தால் நிச்சயமாகச் சமநிலை குலைந்து சாய்ந்துவிழும் என எச்சரித்தனர். பாரிஸ் நகரமே பயத்தால் உறைந்து போனது. எனினும் ஈபிள் தயங்கவில்லை. மூன்றாவது தளத்தை நிறுவி 906 அடிகளைக் கட்டி முடித்தார். இந்த மூன்றாவது தளம்தான் பொதுமக்களுக்காக அனுமதிக்கப்பட்ட உயரமாகும். எனினும் அதற்குமேல் நான்காவது தளம் ஒன்றினை ஈபிள் தனது ஆராய்ச்சிக்காக அமைத்துக் கொண்டார்.

# ஈபிள் கோபுரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





குஸ்ராவ் ஈபிள்

உலகில் மிகப் புகழ் வாய்ந்த சிறந்த கட்ட மைப்பை கொண்டது ஈபிள் கோபுரம் (Eiffel tower) ஆங்கில ஏ ( A ) எழுத்து வடிவில் நீண்டுயர்ந்து எழுந்து நிற்கும் இக்கோபுரம் பிரான்ஸ் நாட்டின் அடையாளமாகவும் பிரான்ஸின் தலைநகரான பரிஸ் நகரத்தின் சின்னமாகவும் விளங்குகிறது.

கோபுரத்தைக் கட்டுவதற்கான ஆரம்ப வேலைகள் தொடங்கியபோது நகைப்பிற்கும் கண்டனத்திற்கும் உரியதாகப் பலராலும் விமர்சிக்கப்பட்டது. 1889இல் பிரான்சியப் புரட்சியின் நூற்றாண்டை நினைவுகூரும் முயற்சியாகவும் சமாதானத்தின் சின்னமாக வும் அதனை உருவாக்கப் பிரான்சிய அரசு விரும்பியது.

அதனை அமைக்கப் பல்வேறு திசைகளிலி ருந்தும் பல விற்பன்னர்களால் தயாரித்து அனுப்பப்பட்ட மாதிரித்திட்டப் படங்கள் பரிசீலிக்கப்பட்டன. அதிலிருந்து தெரிவு செய்யப்பட்ட கோபுரத்தின் மாதிரிப்படமே ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதனை வரைந்தவர் குஸ்ராவ் ஈபிள் (Custave Eiffel) என்பவராவர். எனவே அவரின் பெய ரினாலேயே அக்கோபுரம் ஈபிள் கோபுரம் என அழைக்கப்படுகிறது.

படம் வரைந்த காலத்தில் ஈபிள் அவர் களின் வயது 53. பொறியியலாளராக விளங்கினார். அதிஸ்டம் அவர் பக்கம் இருந்தது. அதற்கு முன்னர் ரூசியாவில் ஓர் அணையும், பொலீவியாவில் ஓர் ஆலையும், மணிலாவில் ஒரு சேச்சும் கட்டிமுடித்த அனுபவம் அவருக்கு இருந்தது. அவற்றோடு பனாமாக் கால்வாயின் சில கட்டமைப்புப் பணிகளையும் செய்திருந்தார். கோபுரத்தை அமைக்கின்ற பணியை அவர் 1887, ஜனவரி, 28 இல் ஆரம்பித்தார்: அத்திவாரம் அகழப் பட்டது. அன்றே இதற்கு எதிராகக் கண்டனக் குரல்கள் எழுந்தன. பிரான்சின் அழகைப் பாழ்படுத்தவிருக்கும் இந்தப் பூதாகரக் கோபுர அமைப்பை உடன் நிறுத்துக என்று அறிக்கை வெளியிடப்பட்டது. இந்த இராட்சத இரும்புப் பூதத்தை, கேலிக்குரிய இந்த எலும்புக்கூட்டு வடிவத்தை அமைக்காது நிறுத்துக எனப் பலர் குரல் எழுப்பினர். எனி னும், எடுக்கப்பட்ட முடிவை மாற்றுவதற்கு அரசு தயாராகவில்லை.

செயின் நதிக்கு அருகில் 46 அடிகள் ஆழ மான அத்திவாரம் அகழப்பட்டது. இது நதிப்படுக்கை மட்டத்திலிருந்து 16 அடிகள் ஆழமானதாக அமைந்தது. இந்த 46 அடிகள் ஆழமான அத்திவாரத்தை வெட்டிமுடிப்ப தற்கு ஐந்து மாதங்கள் எடுத்தன. அடுத்த ஒன் பது மாதங்களில் 189 அடிகள் உயரத்திற்கு முதல் தட்டு வரையிலான கோபுர அடிப் பாகம் கால்களுடன் உயர்ந்தது. அளவுப் பிர மாணங்கள் ஒரு சிறிதளவு கூடப் பிழைக்க வில்லை. அவற்றைப் பிணைக்கும் பணியின் போது எந்த ஒரு ஓட்டையும் புதிதாகவோ, அல்லது சற்று விலக்கியோ இடப்பட வில்லை. வரைப்படத்தின்படி, தரையில் வைத்து இடப்பட்ட ஆணி ஓட்டைகள் உயர் த்திப் பிணைத்தபோது சிறிது பிசகுமின்றி ஆணியைப் பூட்டும் விதமாக அமைந்திருந் தன. இரண்டாவது தளம் அடுத்த நான்கு மாதங்களில் அமைக்கப்பட்டது. முதலாவது தளத்திலும் பார்க்க இரு மடங்கு உயரத்தைக் கொண்டதாக இரண்டாவது தளம் இருக்கின் றது.

748 அடிகள் உயர்ந்த கோபுர வேலைகள் நடந்து கொண்டிருந்தபோது, பொறுப்பான ஒரு விமர்சகர், இந்த உயரத்திற்கு மேல் இக் கோபுரம் உயர்ந்தால் நிச்சயமாகச் சமநிலை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குலைந்து சாய்ந்துவிழும் என எச்சரித்தார். பாரிஸ் நகரமே பயத்தால் உறைந்து போனது. எனினும் ஈபிள் தயங்கவில்லை. மூன்றாவது தளத்தை நிறுவி 906 அடிகளைக் கட்டி முடித்தார். இந்த மூன்றாவது தளம்தான் பொதுமக்களுக்காக அனுமதிக்கப்பட்ட உயரமாகும். எனினும் அதற்குமேல் நான்காவது தளம் ஒன்றினை ஈபிள் தனது ஆராய்ச்சிக்காக அமைத்துக் கொண்டார். இத்தளத்திலிருந்து நோக்கில் 50 மைல் தூரம் வரையான சுற்றாடலைப் பார்க்க முடியும். எனவே, அரசு ஆரம்பத்தில் போட்டியாளர்களிடம் விதித்த நிபந்தனைக்கு ஏற்ப (300 மீற்றர்), இந்தக் கோபுரத்தை 300.65 மீற்றர் (186 அடி 4 அங்குலம்) உயரத்திற்கு நிறுத்திவைத்தார். உச்சியில் ஒரு ஒடுங்கிய மேடையும், அதில் மின்னற் கடத்தியும், கொடிக்கம்பமும் அமைக்கப்பட்டன. 1889 மார்ச் 30 ஆந் திகதி இந்தக் கோபுரத்தின் கட்டுமானப் பணி பூர்த்தியடைந்தது.

இக்கோபுரத்தின் கடைசி ஆணியைப் பூட்டி நிறைவு செய்யும் வேளையில் நகர மக்கள் 50 பேரை ஈபிள் தன்னுடன் உச்சிக்கு ஏறி வருமாறு அழைப்பினை விடுத்தார். அந்த உயரமான கோபுரத்தில் படிகளின் வழியாக ஏறுகின்ற துணிவு அவர்களுக்கு இருக்கவில்லை. எனினும், இருபது துணிச்சல்காரர்கள் அக்கோபுரத்தில் 1585 படிகள் வரை ஏறி நின்றுவிட்டனர். ஈபிள் அவர்களில் சிலரை 1710 படிகள் ஏறவைத்து உச்சிக்கு அழைத்துச் சென்றார். அங்கு பிரான்சியக் கொடியைப் பறக்க விட்டார். இரண்டாவது தளத்திலிருந்து 21 மரியாதை வேட்டுகள் தீர்க்கப்பட்டன. 300 மீற்றர்களுக்கு மேல் உயரமான கொடிக்கம்பம் பிரான்ஸ் நாட்டைவிட உலகில் வேறு எங்குமில்லை என ஈபிள், கோபுர உச்சியிலிருந்து அறிவித்தார்.





ஆறு வாரங்களுக்குப் பின் இக்கோபுரம் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது. பதினையாயிரம் வெவ்வேறு வகையான உறுப்புக்களையம், 2.5 மில்லியன் ஆணி - சுரைகளையும் கொண்டு இந்த இரும்புக் கோபுரம் கட்டி முடிக்கப்பட்டது. முதல் வாரத்தில் 29,922 திடகாத்திரமானவர்கள் படிகள் மூலம் கோபுரத்தின் உச்சிவரை ஏறி இறங்கினர். அவ்வேளை பாரந்தூக்கிகள் கோபுரத்தில் இயங்கவில்லை.

நியுயோர்க் நகரில் கிறிஸ்லர் கட்டிடம் (1046 அடி) கட்டப்படும் வரை, 40 ஆண்டுகளாக ஈபிள் கோபுரமே உலகின் மிகவுயர்ந்த கட்டமைப்பாக விளங்கியது.

ஈபிள் கோபுரத்தின் தாங்கு நிலைச்சக்தி காலத்திற்குக் காலம் பரிசீலனைக்குள்ளாகியது. ஏழு வருடங்களுக்கு ஒரு முறை இக்கோபுரத்தின் பாரம் 45 தொன்களால் அதிகரித்து வருகின்றது. ஏனெனில், 2 இலட்சம் சதுர யார் பரப்புடைய இக்கோபுரத்தை வர்ணம் தீட்டுவதற்கு 8918 கலன் தீந்தை தேவைப்படுகின்றது. 30 துணிச்சல்காரர்கள் எட்டு மாதங்கள் முயன்று, ஏராளமான பிறஸ்சுகளைப் பயன்படுத்தி வர்ணம் பூசிமுடிக்கத் தேவைப்படுகின்றனர்.

1889, மே மாதம் இக்கோபுரத்தில் ஏறுவதற்குரிய பாரந்தூக்கிகள் இயங்கத் தொடங்கின. முதல் நாளிலேயே 23203 பேர் ஏறி இறங்கினர். அந்த ஆண்டில் மட்டும் 19,68,287 மக்கள் இக்கோபுரத்தில் ஏறி இறங்கிக் களித்தனர். இந்த ஒரு வருடத்திலேயே ஈபிள் கோபுரம் கட்டிய செலவில் முக்கால் பங்கு வருமானமாகப் பெறப்பட்டது. ஈபிள் அவர்கள் 91 ஆவது வயதில் காலமாகும் வரை, ஈபிள் கோபுர வருமானத்தில் ஒரு பகுதியினைப் பெறுவதற்கான உரிமை அவருக்கு இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஈபிள் கோபுரத்தைக் காணவும் ஏறி இறங்கவும் வரும் பயணிகளின் எண்ணிக்கை குறைந்த காலங்களில், அந்தப் பூதம் ஏன்? ஒன்றுக்கும் பயனில்லை என்ற குரல்கள் எழும். 1903 ஆம் ஆண்டு ஈபிள் கோபுரத்தை வேறு தேவைகளுக்குப் பயன்படுத்த ஆரம்பித்தனர். முதலில் தந்திக் கோபுரமாக ஈபிள் மாறியது. கோபுரத்தளங்களில் பணிமனைகள், ஹோட்டல்கள் நிறுவப்பட்டன. 300 பேர் வரை இக்கோபுரத்தில் ஏறிக் கீழே குதித்துத் தற்கொலை செய்துகொண்டனர். சிலர் சாதனை புரிவதற்காக முழங்கால்களால் உச்சிவரை ஏறினர். சிலர் பின்பக்கமாக உச்சிவரை சென்றனர் யானை ஒன்று கோபுர மூன்றாம் தளம் வரை ஏற்றி இறக்கப்பட்டது. சைக்கிள் ஒன்று மேலிருந்து கீழ் நோக்கிச் செலுத்தப்பட்டது. ஒரு தையற்காரர் தான் பரீட்சார்த்தமாகச் செய்த பாரசூட் மூலம் உச்சியிலிருந்து குதித்துக் கால்களை உடைத்துக் கொண்டார். சிலர் படிகள் மூலமோ பாரந்தூக்கிகள் மூலமோ ஏறாது, சட்டங்களைப் பற்றி உச்சிக்கு ஏறி இறங்கிச் சாதனை செய்தனர். ஒரு மனிதன் ஈபிள் கோபுரம் தனதெனக் கூறி இன்னொருவனுக்கு விற்பனை செய்து பிடிபட்டான்.

எவ்வாறாயினும் இன்றும் ஈபிள் கோபுரம் கம்பீரமாக உயர்ந்து நிற்கின்றது. பிரான்சின் சின்னமாக அது எழுந்து நிற்கிறது.

## கற்பூரத் தைலம்

இது பைன் (Pine) மரத்திலிருந்து வடியும் எண்ணெய். நாற்பது ஆண்டுக்கு மேற்பட்ட மரங்களில் மாத்திரம் இவ்வெண்ணெய் வடியும். பைன் மரங்கள் கனடா சைப்பிரஸ் நாடுகளில் அதிகம் காணப்படும். பைன் மரங்களிலிருந்து மேற்குத் தேசங்களில் நெருப்புக் குச்சிகள் செய்யப்படுகின்றன. இதில் எண்ணெய்த் தன்மையிருப்பதால் இது நன்றாக எரியும். கற்பூரத் தைலத்திலிருந்து எடுக்கப்படும் பையின் (Pinene) என்னும் உப்பிலிருந்து செயற்கைக் கற்பூரம் செய்யப்படுகிறது.

# எழுதப் பழகுவோம்




எழுதப் பழகுவோம் - நாங்கள்
எழுதப் பழகுவோம்
எழுத்தும் எண்ணும்
என்றும் கண்ணாம்
எழுதப் பழகுவோம்.

எழுதப் பழகுவோம் - அழகாய்
எழுதப் பழகுவோம்
எழுத்தின் சேர்க்கை
இனிதாம் வார்த்தை
எழுதப் பழகுவோம்.

எழுதப் பழகுவோம் - உறுப்பாய்
எழுதப் பழகுவோம்
அழகாம் தமிழின்
அமுத மொழியில்
அழகைப் பெருக்குவோம்.

■ உமாபாரதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உள்ளம் உவந்து அளிப்பதே உயர்ந்தது.

முன்னொரு காலத்தில் இசுலாமியத் துறவிகளுள் புகழ் பெற்றவராக ஜலால் என்பவர் விளங்கினார். நிறைய சீடர்கள் அவருக்கு இருந்தனர். அரசர்கள் பலரும் அவருடைய திருவடியை வணங்கி விலை உயர்ந்த பொருள்களைக் காணிக்கையாகத் தந்தனர்.

ஒரு நாள் ஏழை உழவர்கள் இரண்டு பேர் துறவியைக் காண வந்தனர். அவருடைய திருவடிகளில் விழுந்து வணங்கினார்கள்.

தாங்கள் உண்பதற்காக வைத்திருந்த கூழைக் காணிக்கைப் பொருளாகத் துறவியிடம் தந்தார்கள்.

மகிழ்ச்சியுடன் அதை வாங்கிய துறவி அவர்கள் எதிரிலேயே அந்தக் கூழைக் குடித்தார். அவர்களும் மகிழ்ச்சியுடன் அங்கிருந்து சென்றனர்.

மீதி இருந்த கூழைத் தன் சீடர்களுக்குக் கொடுத்தார். அவர்.

எவ்வளவு விலை உயர்ந்த பொருள்கள் எல்லாம் நம் குருவிற்குக் காணிக்கையாக வந்துள்ளன. இந்தக் கூழைக் காணிக்கையாகத் தர அவர்களுக்கு எப்படி மனம் வந்தது என்று அதை அருவருப்புடன் பார்த்தார்கள் சீடர்கள்.

தன் சீடர்களின் மனநிலையை அறிந்தார் அவர்.

அவர்களைப் பார்த்து சீடர்களே! நாம் நாளும் வணங்கி வழிபடும் இறை தூதர் நபிகள் நாயகம் ஆவார். எதிரி நாட்டின் மீது படையெடுப்பதற்காக அவருக்குப் பெரும் பொருள் தேவைப்பட்டது. இதை அறிந்த பலர் தங்கள் சொத்துக்களில் பாதியை விற்றுப் பணம் தந்தார்கள். அபுபக்கர் தன்னிடம் இருந்த எல்லாப் பொருள்களையும் நபிகள் நாயகத்திடம் தந்தார். இப்படியே ஏராளமான பணம் சேர்ந்தது.

அங்கு வந்த ஏழைக் கிழவி ஒருத்தி நபிகள் நாயகத்தை வணங்கினாள். தன் கையில் இருந்த நான்கு பேரீச்சம் பழங்களையும் சிறு ரொட்டியையும் காணிக்கையாக அவரிடம் தந்தாள்.

எளிமையான அந்தக் காணிக்கைப் பொருளைப் பார்த்து அங்கிருந்த பலர் சிரித்து விட்டனர்.

உடனே நபிகள் நாயகம் அவர்களைப் பார்த்து நான் சற்று நேரத்திற்கு முன் ஒரு கனவு கண்டேன். அதில் இங்கு காணிக் கையாக வந்த பொருள்களை எல்லாம் எடை போட்டுக் கொண்டிருந்தனர். அதில் நான்கு பேரீச்சம் பழங்கள் இருந்த தட்டே தாழ்ந்து கிடந்தது. எதிர்த்தட்டில் இங்கிருந்த எல்லாப் பொருள்களையும் வைத்தனர். அப்பொழுதும் அந்தத் தட்டு சிறிதும் உயரவில்லை

இதிலிருந்து என்ன தெரிகிறது? அன்புடன் தரப்படும் காணிக்கைப் பொருள் சிறிதாயினும் அதுவே விலை உயர்ந்த பொருள்களை விட மதிப்பில் உயர்ந்தது. நாம் பொருளைப் பார்க் கக் கூடாது. தந்தவர் உள்ளத்தைப் பார்க்க வேண்டும் என்றார்.

தங்கள் செயலுக்கு வருந்திய எல்லோரும் நபிகள் நாயகத்திடம் மன்னிப்பு வேண்டினார்கள் என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்ச்சுனா தரும்

# சொற்கோலம்




திறனாய்வு இலக்கம் 4



சொற்கோலம்
அர்ச்சுனா
361 கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்

## இடமிருந்து வலமாக

1. யானை
2. இரத்த நிறம்
5. இடைச்சி
6. கப்பல்
7. இது சிறிது காரம் பெரிது
8. திருத்தம்
9. ரவையில் செய்தது
10. வீரமாமுனிவர் இயற்றியது
13. நேரம்
14. இந்திய அகிம்சை மகான்
16. பொன் மணல்



## மேலிருந்து கீழாக

1. பொன்
2. இவர் ஒரு சக்கரவர்த்தி
3. உபாயம் தேடும்
4. பூமி
5. இடைச்சேரி
10. கோவிற் பூங்கா
11. வகை தேடு
12. கணக்கு
13. நண்பகல் (இறுதி எழுத்தில்லை)
14. சந்திரன்
15. பெண்

ஒக்ரோபர் 25ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகக் கூப்பனைப் பூர்த்தி செய்து சொற்கோலம் 4, அர்ச்சுனா, 361 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள். சரியான விடை யெழுதிய அதிஸ்டசாலிகள் மூவருக்கு முறையே 250/=, 150/=, 100/= ரூபாய் பணப்பரிசுகள் வழங்கப்படும்.

## காஞ்சோன்றியில் தொட்டால் ஏன் சுணைக்கிறது?

காஞ்சோன்றியிலும் வேறு சில செடிகளிலும் சுணை இருக்கிறது. சுணை என்பது மயிர் போன்ற கூரிய முனைகள். ஒவ்வொரு சுணையின் அடியிலும் ஒவ்வொரு குமிழ் இருக்கிறது; குமிழிலிருந்து முனைவரையிலும் துவாரம் செல்கின்றது. உடலில் பட்டதும் சுணை தோலிற் புகுந்து முறிந்து விடுகின்றது. சுணையின் அமுக்கத்தினால் குமிழிலுள்ள நஞ்சு தோலிற் பாய்கிறது. இதனால் நோவு அல்லது சொறிவு உண்டாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டறியாதது

## "வானவில்"

**கந்தையா**

சோக்கான மழை தம்பி சோ என்று பெய்திருக்கு,
வாய்க்கால் வயல்வெளிக்கு வந்திருக்கு தோர் எழுப்பம்
நல்லதொரு வேளாண்மை நமக்கிவ் வருடமடா
மெல்ல நட மழைத்தூறல் மினைக்கெடுதல் கூடாது.

**வடிவேலு**

குளிரோடு கதகதப்பு கூதல் எனப் பார்த்தாலோ
மழையோடு தேர்ந்ததொரு வெயிலாயும் இருக்கிறதே.

**கந்தையா**

குளிரோடு வெயில் நல்ல இதமேதான் அதோடு! அழகாய்
பெரியதொரு வில் அங்கே போட்டிருக்கு பார் வடிவேல்.
சிவப்பு மஞ்சள் பச்சை மற்றும் நீலமுடன் ஊதா பார்.
வரிவரியாய் அழகான பஞ்சவர்ணப் பட்டையதோ
அளந்தளந்த மாதிரியாய் அளவளவாய்த் தெரிகிறதே
மழைநேர வெயிலிடையே மட்டுமிது தோன்றுவதேன்?

**வடிவேலு**

வானவில்லின் வடிவான வண்ணமொளிர் தோற்றத்தின்
வரலாறு சொல்லுகிறேன் வடிவாய்க்கேள் கந்தையா;
குளத்திலே கல்லெறிந்தால் உற்பவிக்கும் அலை விரிந்து
கரை நோக்கிச் செல்வதனைக் கண்டிருப்பாய்த அதுபோல
அலை வடிவில் ஒளி செல்லும்; அதுபோக இன்னுமொன்று
சூரியனின் வெள்ளொளியோ பலவேறு நிறக்கலவை
எல்லா நிற அலையும் ஒரே வடிவில் இருப்பதில்லை.

**கந்தையா**

நிற அலைக்கும் நீள்வானில் போட்டிருக்கும் வில்லுக்கும்
எதுவிதத்தில் சம்பந்தம் என்பது தான் தெரியவில்லை.

**வடிவேலு**

ஒளித்தெறிப்பும் ஒளிமுறிவும் உண்டென்பதறிவாயா?

**கந்தையா**

முகம் பார்க்கும் கண்ணாடி ஒளி தெறிக்கும் சங்கதியும்
வயல்வெளியில் வெள்ளத்தில் நாற்றுநட்ட அப்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இ. சிவானந்தன்

நீர்ப்பரப்பில் முறிந்தது போல் தோன்றிய அந் நாற்றுருவம்
ஒளிமுறிவால் உண்டான தென்றெல்லோ சொன்னாய் நீ.

**வடிவேலு**

அதுபோல இங்கேயும் சூரியொளி நிறங்கலெல்லாம்
மழைத்துளிக்குள் ஒளித்தெறிப்பும் ஒளிமுறிவும் அடைவதனால்
துளியினுட் புகுந்து பின்னர் வெளியிலே வந்தவேளை
ஒவ்வொரு நிறமும் வேறாய் ஒவ்வோரு திசையை நோக்கும்.
ஒரே நிற ஒளிகளெல்லாம் ஒரேதிசை நோக்கும் போது
பலவரி நிறங்களாகப் பரந்ததே வானவில்லு.

**கந்தையா**

பலநிற வரிகளெல்லாம் எதுவித விலகலின்றி
ஒருவித மாயே சென்று வில்லினை ஒப்பதேனோ?

**வடிவேலு**

மழைத்துளியின் உருவத்தை உருண்டையென கொள்வோமேல்
ஒளித்தெறிப்பும் ஒளிமுறிவும் உருண்டை மையம் தனைப்பற்றிச்
சமச்சீராய் அமையும் ஆக வானவில் வட்டமாகும்த
அடிவானம் இடையேவந்து மீதி வில் மறைத்துக் கொள்ளும்.

**கந்தையா**

பூமியை விட்டு நாங்கள் விமானத்தில் செல்லும்போது
வட்டமாய் வானவில்லைப் பார்த்திடல் கூடும் மேலும்
துலக்கமாய்த் தெரியும் வில்லைத் தொட்டது போல அங்கே
மயக்கமாய் சிவப்பிரண்டும் அருகரு கங்கேயுண்டு.

**வடிவேலு**

இருமுறை மழைத்துளிக்கு ஒளியது முறியுமானால்
வெளிவரும் இன்னோர் வில்லு; வெளிறிய மங்கல் வில்லு
இந்த வில் நிறங்களெல்லாம் அறம்புறம் ஆயிருக்கும்
ஆதலாற் சிவப்பிரண்டும் அருகரு கங்கேயுண்டு.

**கந்தையா**

என்னுடை மனைவி மூக்கின் இடப்புறம் மிளிருகின்ற
வைர பே சரியிற் பட்டுச் சுவரிலே பட்ட வெய்யில்
பலவரி வர்ணப்பட்டை படரவே விடுதலுண்டு.
இதுவுமே ஒளிமுறிவால் உண்டான தொன்றுதானோ?

கண்ணாடி ஓரந்தன்னில் ஒளி பட்டு முறியும்போது
பட்டைகள் நிறத்திலங்கே பார்த்திடல் கூடுமண்ணே.
மோதுறான் தள்ளு! தண்ணீர்த கார் அவன் ஆள் ஆர் பார் நீ.

புறக்கிறாசி சிவஞானி புழுக்கைப் பயல் இவர்கள்.
எம்.பியாம் பேரிவர்க்குத இக்கணம் வரட்டும் லெச்சன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெலே எரிமலைச்

அத்திலாந்திக் சமுத்திரத்தில் தென் அமெரிக்காவுக்கு வடக்கில் மாட்டினிக் எனும் கரீபியன் தீவு உள்ளது. இத்தீவில் புனித பியெர் துறைமுகம் அமைந்திருந்தது. அதுமட்டுமன்றி இத்தீவில் உள்ள எரிமலைக்கு எரிமலைகளின் தேவதையாகக் கருதப்பட்ட 'பெலே' எனும் நாமம் சூட்டப்பட்டிருந்தது.

1902ஆம் ஆண்டில் ஒரு நாள் காலை 8மணி அளவில் சென்ற் பியெர் துறைமுகம் பரபரப்புடன் இயங்கிக் கொண்டிருந்தது. அத்தீவில் உற்பத்தியாகும் சீனி, வாழைப் பழம் மற்றும் கரும்புச்சாற்றில் தயாரிக்கப் படும் போதையூட்டும் தன்மை வாய்ந்த 'றம்' எனும் மதுபானம் என்பன துறை முகத்தில் தரித்திருந்த கடற்கப்பல்களில் ஏற்றப்பட்டுக் கொண்டிருந்தன. அச்சமயத்தில் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த செல்வந்த உல்லாசப் பயணிகள் அங்குள்ள வனப்பு மிக்க தெருக்களில் உல்லாச நடை பயின்று கொண்டிருந்தனர். அதே சமயத்தில் உள்ளூர் வாசிகள் கடும் வெப்பமான சூழலில் பழத்தோட்டங்களிலும், விவசாயத் தோட்டங்களிலும் கடினமாக வருந்தி உழைத்துக் கொண்டிருந்தார்கள்.

இன்னும் கூட மக்கள் நகரத்தைவிட்டு வெளியேறிக்கொண்டிருந்தார்கள். சிலர் அவர்களைத் தீவுக்கப்பால் ஏற்றிச் செல்வதற்காக படகுகளுக்காகக் காத்திருந்தனர். ஏனையோர் வீதிகளினூடாக வெளியேறிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் யாவரும் மனக்கலக்கம் அடைந்தவர்களாகக் காணப்பட்டனர். ஏனெனில் வழமையில் அமைதியாக இருக்கும் பெலே எரிமலை பெருமளவில் புகையினையும் சாம்பலையும் கக்கிக் கொண்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீற்றத்தின் கொடூரம்

■ ஜெகன்

ஆபத்தெதுவும் இல்லையென உத்தி யோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது. ஆனால் இவ்வறிவிப்பு நகரைப்பற்றிப் பிடித்திருந்த அச்சத்தைப் போக்கவில்லை. அத்துடன் மேலும் அதிக மக்கள் வெளியே றுவதைத் தடுத்து நிறுத்துவதற்கு அந்நகர கவர்னர் மோர்ட்டேட் தனது படைவீரர் களை அனுப்பினார்

இந்நிலையில் உள்ளூர்வாசியான பாத ணித் தயாரிப்பாளரான லியோன் என்பவர் மக்கள் அவதிப்பட்டு வெளியேறுவதை அவதானித்த வண்ணமிருந்தார். அவர் தனது வாழ்நாள் முழுவதும் அவ்வூரிலேயே வாழ்பவர். அத்துடன் மனப்பீதி கொள்வ தற்கான காரணம் எதுவும் இல்லையென் பதை அவர் அறிந்திருந்தார்.

அதேவேளையில், அவ்வூரில் உள்ள சிறைக்கூடத்தின் அறையொன்றில் கொலைக்குற்றவாளியாகக் காணப்பட்டு நீதி மன்றத்தினால் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட அகஸ்ரி சிபரிஸ் எனும் கைதி நகரத்தில் நடப்பது எதுவும் அறியாத வனாக ஒன்றினைப்பற்றியும் கவலை கொள்ளாதவனாக் ஒரு யன்னலுமே அற்ற அச்சிறைக் கூட்டத்தினுள் பூட்டப்பட்ட நிலையில் இருந்தான்.

திடீரென ஓராயிரம் பீரங்கிகள் ஒரே தட வையில் முழங்குவது போன்ற பேரோ சையுடன் பெலே எரிமலை வெடித்துச் சித றியது. வெள்ளை முகில் போன்ற கன்றெ ரியும் புகையுடன் தூசி, மற்றும் வாயு என் பன எரிமலைவாயிலில் இருந்து வெளிப் பட்டு மலையின் அடிவாரத்தை நோக்கி உருண்டோடி சென்ற் பியெர் துறை முகத்தை நோக்கியவாறு முன்னேறியது.

மூச்சைத் திணறவைக்கும் வெப்பக் காற்று தாமதமேதுமின்றி அக்கணத்தி லேயே பெரும்பாலான மக்களைக் கொன் றது. சிலர் தப்பிப்பதற்கு முயற்சித்தனர் ஆனால் விரைந்து வந்த புகை மூட்டம் அவர்களைக் கடந்து சென்று அவர்கள் அனைவரையும் கொன்றொழித்தது. அவ் வளவு மோசமான வெப்பமாக இருந்தது.



சில மனிதர்களின் தலை ஓடுகள் மற்றும் வயிறுகள் என்பன வெப்பத்தின் கொடூ ரத்தால் வெடித்துப் பிளந்திருந்தன.

பாதணித் தயாரிப்பாளரான லியோன் செய்வதறியாது மார்பைக் கைகளினால் அழுத்திப்பிடித்தவாறு வீட்டினுள் மலைத் தவாறு நின்றார். அவரது சுவாசப்பை இயங்க மறுத்தது. அவரது சருமம் முழுவ தும் எரியத் தொடங்கியது அவர் செய் வதற்கு இயலாத நிலையில் தப்பியோட எத்தனிக்காது மரணத்தை எதிர்பார்த்தபடி கட்டிலில் வீழ்ந்தார்.

அவரைச் சுற்றிவர இருந்த பொருட்கள் யாவும் வெப்பத்தினால் உருகத் தொடங் கின.

தரைமட்டமாகிய களஞ்சியச் சாலைக ளில் இருந்து எரிந்த நிலையில் ஓடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'றம்' மதுபானத்தால் வீதிகள் எங்கும் தீப் பிளம்பாகக் காட்சியளித்தது. துறை முகத்தில் தரித்திருந்த கடற்கப்பல்கள் யாவும் எரிந்து கவிழ்ந்து நீரில் மூழ்கின. ஒரு சில வினாடிகளுக்குள் சென்ற் பியெர் துறைமுகம் முழுமையாக அழிந்த நிலையில் காட்சியளித்தது.

நம்புவதற்குக் கடினமாக இருப்பினும் லியோன் மீட்புப்பணியாளர்களால் மீட்கப்பட்டார். வேறெவரும் அந்நகரில் உயிருடன் இல்லை. எனினும் நான்கு நாட்களின் பின்னர் ஒரு தெளிவற்ற ஈனக்குரல் மீட்புப்பணியாளர்களின் காதில் எதேச்சையாக விழுந்தது. மிகவும் சிரமப்பட்டுத் தோண்டியபோது கைதியான அகஸ்ரி சிபரிஸ் சிறைக்கூடத்தின் இடிபாடுகளின் மத்தியில் புதையுண்ட நிலையில் குற்றுயிருடன் மீட்கப்பட்டான்.

அதிஸ்டவசமாக அடைபட்டுக்கிடந்த சிறைக்கூடத்தின் தடித்த சுவர்கள் அவனது உயிரைக் காப்பாற்றியது! அவனுக்கு மன்னிப்பு அளிக்கப்பட்டு பின்னர் விடுதலையானான்.

20ம் நுற்றாண்டில் நேரிட்ட எரிமலை அனர்த்தங்களில் மிக மோசமானது பெலே எரிமலையின் சீற்றமேயாகும். இரண்டேயிரண்டு மக்கள் மட்டுமே மீட்கப்பட்டனர். அந்நகரின் 30000மக்களில் மீதியானோர் ஒரு சில நிமிடங்களில் துடைத்தழிக்கப்பட்டனர்.





# விடுகதைகள்

1 நீரிலே பிறந்து நீரிலே கரைவான் யார் அவன்?

2 வெள்ளைப் பாம்பு கல்லைத் தூக்குது அது என்ன?

3 அப்பன் சொறியன் ஆத்தாள் சடைச்சி நானோ சக்கரைக் குட்டி அது என்ன?

4 மரத்திற்கு மேல் பழம் பழத்திற்கு மேல் மரம் அது என்ன?

5 டொக்டர் வந்தாரம் ஊசி போட்டா ராம் காசு வாங்காமல் போய் விட்டார்? யார் அவர்

6 கடலுக்கு நடுவில் இருப்பது என்ன?

7 ஒன்று தாளும், ஒன்று மிதக்கும், ஒன்று கரையும், ஒன்று சேர்ந்தால் சிவக்கும் அவை எவை?

8 உரித்த கோழி சந்தைக்குப் போகுது அது என்ன?

9 உரிக்க உரிக்க தோல் அது என்ன?

10 ஓடும் பாயும் நடக்காது அது என்ன?

விடைகள் 31 ஆம் பக்கத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருகோணமலை மாவட்டம்

| | | |
|---|---|---|
| மொத்தப் பரப்பு | - | 2727 சதுர கிலோமீற்றர் |
| நிலப்பரப்பு | - | 2529 சதுர கிலோமீற்றர் |
| நீர் நிலைகள் | - | 198 சதுர கிலோமீற்றர் |

பிரதேச செயலகர் பிரிவுகள் 11

- நகரமும் சூழலும்
- கோமரங்கடவல
- மூதூர்
- கிண்ணியா
- சேருவில்
- தம்பலகாமம்
- கந்தளாய்
- குச்சவெளி
- மொறவேவ
- பதவிசிறிபுர
- வெருகல்
- ஈச்சிலம் பற்று



சனத்தொகை 383000 ஆண்கள் - 193000 பெண்கள் - 195000

10வயதுக்கு மேற்பட்டவர்கள் - 330112 (2004 இல்)

| தொழிலாளர் அணியின் பங்கீடு | | |
|---|---|---|
| | விவசாயம் | 30.2% |
| | கைத்தொழில் | 12.8% |
| | சேவைகள் | 57% |





இந்த மாவட்டம் பல்வேறு வகையான தாவரங்களையும் விலங்கினங்களையும் கொண்டது இங்கே இயற்கைத் துறைமுகம் அமைந்துள்ளது. கன்னியாவிலுள்ள வெந்நீர்க் கிணறுகளும் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த கோணேஸ்வரர் ஆலயமும் பிரசித்தி பெற்றவை. அழகிய கடற்கரைகளைக் கொண்ட இம்மாவட்டத்தில் சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்வதற்கு வாய்ப்புகள் உள்ளன. கடல் வாழ் உயிரினங்களை யும், பறவைகளையும் பார்க்க விரும்பும் சுற்றுலாப் பயணிக ளுக்கு இது சிறந்த இடம். இங்கு நெற் செய்கைக்கு அடுத்த படியா கப் பழ வகைகள், காய் கறி வகைகள் செய்கை பண்ணப் படுகின்றன. செங்கல் உற்பத்தி, சீமெந்திலான பூச்சட்டிகளின் உற்பத்தி, உணவு பதனிடுதல், கைத்தறி நெசவு, ஆடை தயாரி ப்பு, மரத்தளபாட உற்பத்தி, அரைக்கும் ஆலைகள் என்பன சிறிய தொழில் முயற்சிகளாக மேற் கொள்ளப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் அழகான கையெழுத்துக்கு...!



ஜெகன்

பிள்ளைகளே உங்கள் எழுத்துக்கள் அழகாக வும் உறுப்பமைவாகவும் எழுதப்படுவதன் மூலமே உங்கள் கட்டுரைகள், கவிதைகள், கதைகள் என்பவற்றை ஏனையோர் வாசிக்கும் ஆர்வத்தைத் தூண்டலாம்.

உங்கள் கையெழுத்துக்கள் அழகற்றவை என்பதைத் தீர்மானிக்காதவரையில் உங்கள் கையெழுத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவது இலகுவானதல்ல.

நீங்கள் அழகானதும் உறுப்பமைவானது மான எழுத்துக்களை எழுத வேண்டுமாயின் உங்கள் உளமும் உடலும் ஒருமனப்பட்டுச் செயலாற்ற வேண்டும். அதற்கென எமக்கு உறுப்பமைவாகவும் அழகாகவும் எழுதுவதற் கான ஒழுங்கான செயற்பாடுகள் அவசியமா கின்றன. எழுதும் போது கை மணிக்கட்டும் முழங்கையும் சரியான நிலையில் இருக்கப் பேனா அல்லது எழுது கருவியைப் பிடித்துக் கொள்ள வேண்டும். எழுத்துக்களை எழுதுவ தற்காகப் பேனாவை நகர்த்தும் போது தோள் சமநிலையில் தடுமாற்றமற்று உறுதியாக இருக்கப் பார்த்துக் கொள்ளுங்கள்.

கண்கள் உங்கள் கை எழுதும்போது என்ன செய்கிறது என்பதைப் பின்பற்றி நகர்வதோடு நீங்கள் எழுதும் எழுத்துக்களும் அவற்றின் வடிவம் அவற்றை எழுதுவதற்காக நீங்கள் கையினை அசைக்கும் திசை என்பவற்றைச் சரிசெய்ய மூளைத்திறன் வேண்டப்படுகிறது.

உங்களிற் சிலர் எழுதுவதற்குத் தடுமாறு வது உண்டு. அத்தகையோருள் சிலர் ஓரிடத்தில் தொடர்ந்து இருந்து எழுதுவதற்கு ஏற்ற மனப் பக்குவம் அடையாதவராக இருக்கிறார்கள். ஓரிடத்தில் இருப்பவர்கள் மிக விரைவாக எழுத முயற்சிக்கிறார்கள். அமைதியின்றி இருப்பவர்கள் உறுப்பமைய எழுதுதல் இயலாததாகும். அமைதியாக ஆறுதலாக இருந்து எழுதப் பயிலுதல் மூலமே அழகான எழுத்துக் களை எழுதுதல் கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்துறுப்புக்களினை அவதானித்து எழுதும் பயிற்சியை மேற்கொள்வதற்கு உடலுறுப்புக்களின் ஒத்துழையாமை இருப்பின் வைத்தியர் உதவியுடன் அவற்றைக் கண்டறிந்து சீர் செய்தல் வேண்டும்.

நீங்கள் எழுதும் வல்லமை உடையவரெனின் உறுப்பமையவும். அழகாகவும் எழுதுவதன் மூலம் உங்களின் கையெழுத்துக்களை பலரும் விரும்பி வாசிக்கவும் உங்கள் கருத்துக்களை ஏற்கவும் செய்யலாம்.

உங்கள் கையெழுத்தை மேம்படுத்தும் பொதுவான வழிமுறைகளாகப் பின்வருவனவற்றைக் கடைப்பிடிக்க முயலுங்கள்.

அவையாவன : சரியான முறையில் எழுதுகோலைப் (பென்சில், பேனா) பிடித்தால் எழுதும் எழுத்துக்கள் சுலபமாக நன்கமையும். பேனாவையோ அல்லது பென்சிலையோ உங்களது பெருவிரலுக்கும் சுட்டுவிரலுக்குமிடையிலுள்ள தளத்தில் சற்று சாய்வாக வைத்த நிலையில் பெருவிரலினாலும் அவற்றுடன் சுட்டுவிரல் மற்றும் ஏனைய விரல்களாலும் இறுக்கமாகப் பற்றிப்பிடித்துக் கொள்ளல் வேண்டும்.

- நேராக ஒரே கோட்டில் சீராக அமையக் கூடியதாக எழுதவேண்டும். கூடுமானவரையில் எழுத்துக்கள் யாவும் ஒரே அளவுடையனவாயிருத்தல் சிறப்புக்குரியது.
- ஓரளவு சுமாரான வேகத்தில் எழுத வேண்டும். அதனை விடுத்து வேகமாக அவசரப்பட்டு எழுதுவீர்களேயாயின் அது பலதவறுகள் உண்டாக்கும் விதத்தில் முடிவடையும்.
- எழுதும் வேளையில் பேனாவையோ அன்றிப் பென்சிலையோ ஓரளவு இறுக்கமாகப் பற்றிப்பிடித்து எழுதும் தாளின் மேல் சாதாரண அழுத்தத்தைப் பிரயோகித்து எழுத வேண்டும். கடுமையாக அழுத்தி எழுத வேண்டாம்.

இவ்வழி முறைகளைப் பின்பற்றி எழுத்தாற்றலை வளர்ப்பீர்களாயின் உங்களது எழுத்துவடிவம் அழகுறும் உங்கள் மனமும் பரவசமடையும்.



# சின்ன விஷயங்கள்...

துளித் துளியாகப் பெருகும் நீரே
சமுத்திர மதனைச் சமைத்துத் தருவது
மணி மணியான மண் துணிக்கைகளே
பூமியை அழகாய் ஆக்கித் தருவது

அமைதியில் நகரும் நிமிடத்துளிகளே
அடக்கத்துடனே நடந்து கொண்டாலும்
மணி நாள் மாதம் வருடமென்றாகி
யுகங்களாய் நீண்டு தொடர்ந்து போவது.

சின்னச்சின்ன அன்புச் செயல்களும்
அன்பினில் ஊறிய நல் வார்த்தைகளும்
இந்தப் பூமியை எழில் கொள் சோலையாய்
இனியதோர் சுவர்க்கமாய் மாற்றித்தருவது.

ஆங்கில மூலம் – ஈ.சி.புரூவர் (E.C.Brewer)
தமிழில் – ந.சத்தியபாலன்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தலைமை நெசவாளி

சிறி மஜனி

ஒரு அடர்ந்த காட்டில், வெகு தூரத்தில் ஒரு பெண் சிங்கம் வாழ்ந்து வந்தது. ஒரு நாள் அந்தப் பெண் சிங்கம் திருமணம் செய்து கொள்ளப் போவதாகத அறிவிக்கப்பட்டது. கல்யாண நாளன்று, மிகப் பெரிய கொண்டாட்டமும் விருந்தும் நடைபெறும் என்பதை நினைத்து, எல்லா மிருகங்களும் மகிழ்ச்சி அடைந்தன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்யாணம் சம்பந்தமான ஒவ்வொரு வேலையையும் ஒவ்வொரு மிருகத்தையும் செய்யச் சொல்லியும் அனைவரையும் அழைத்து பேசியும் பெண் சிங்கம் ஓய் வில்லாமல் வேலை செய்து கொண்டிருந்தது. ஒருறை பட்டுப் பூச்சியை அழைத்து, என்னுடைய கல்யாணத்திற்குரிய ஆடைக்காக இருபது மீற்றர் நீளமான பட்டு நூல், நீ எனக்கு நெய்து தர வேண்டும் என்று கூறியது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னால் முடிந்த வரை உனக்கு உதவி செய்கிறேன் என்று பட்டுப் பூச்சி பெண் சிங்கத்திடம் கூறியது. உடனே தனது வீட்டிற்குச் சென்று ஆர்வத்துடன் பட்டு நூலை நெய்ய ஆரம்பித்தது பட்டுப் பூச்சி. சிறிது நேரம் கழித்து அங்கே வந்த ஒரு சிலந்தியும் தனது வலையை அதன் அருகில் பின்னத் தொடங்கியது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலந்தி தனது வலையை வேகமாகப் பின்னத் தொடங்கிக் குறுகிய நேரத்தில் அது வலையை பின்னி முடித்தது. உடனே சிலந்தி, பட்டுப்பூச்சியிடம் எனது வலையை பார், எவ்வளவு மெல்லியதாகவும், அருமையானதாகவும் உள்ளது. எவ்வளவு குறுகிய நேரத்தில் வலையைப் பின்னி முடித்து விட்டேன். உன்னை விட நான் சிறந்த நெசவாளி என்று கூறிப் பெருமை அடித்துக் கொண்டது.





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பட்டுப்பூச்சி எழுந்து வந்து சிலந்தி வலையை தொட்டுப் பார்த்தது. நான் ஒத்துக் கொள்கிறேன் ஆனால் உன் வலையை யாராவது பார்த்துவிட்டால் உடனே சுத்தம் செய்கிறேன் என்று கூறி அழித்து விடுவார்கள் ஆனால் என்னுடைய பட்டு நூல் நெசவை எல்லோருமே பத்திரமாகப் பாதுகாப்பார்கள், என்று பட்டுப் பூச்சி கூறியது. அதனைக் கேட்ட சிலந்தி நாணமடைந்தது.

**உண்மையான கலையை அனைவருமே போற்றிக் காப்பார்கள்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பான பிள்ளைகளே

உங்கள் ஆக்கங்களை எங்களுக்கு அனுப்பி வையுங்கள். தரமானவை அனைத்தையும் அர்ச்சுனா தனது பக்கங்களில் சேர்த்து கொள்ளுவான்.

அர்ச்சுனா சிறுவர் வட்டத்தில் சேர்ந்து கொள்ளுங்கள். புதிய படிவத்தை பூர்த்தி செய்து உங்கள் அழகிய நிழற்படத்துடன் எமக்கு அனுப்பி வையுங்கள்

**தொடர்புகளுக்கு :**

**ஆசிரியர்**
**அர்ச்சுனா, சிறுவர் வட்டம்**
**361 கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**



# அர்ச்சுனா

## சிறுவர் வட்டம்

முழுப்பெயர் : ...........................................................
...........................................................

வகுப்பு : ...........................................................

பிறந்த திகதி : ...........................................................

பாடசாலையின் பெயர் : ...........................................................
...........................................................

வீட்டு முகவரி : ...........................................................
...........................................................

................................. மாணவர் கையொப்பம்

................................. அதிபர் கையொப்பம்





# அர்ச்சுனா சிறுவர் வட்டம்



15 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் அர்ச்சுனா சிறுவர் வட்டத்தில் உறுப்பினர்களாகச் சேரலாம்.


உறுப்பினர்களாகச் சேர விரும்புவோர் அர்ச்சுனாவில் வெளியாகும் 3 கூப்பன்களை நிரப்பி அனுப்புதல் வேண்டும்.

உறுப்பினர்களாகச் சேர்ந்த மாணவர்கள் எழுதும் கதை கவிதை கட்டுரைகள் ஏனையவை அர்ச்சுனாவில் வெளியாகும்.

மாணவர்கள் தமது ஆக்கங்களைத் தாளில் ஒரு பக்கத்தில் மட்டும் எழுத வேண்டும். மாணவர் தானாகவே எழுதினார் என்று வகுப்பாசிரியர் அல்லது அதிபர் உறுதியுரை வழங்க வேண்டும்.

அங்கத்தவர் உறுப்புரிமை அட்டை அஞ்சலில் அனுப்பி வைக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெரியவன்

முன்னொரு காலத்தில் ஒரு நாட்டை அரசன் ஒருவன் ஆண்டு வந்தான். அந் நாட்டு மக்கள் எதற்கெடுத்தாலும் அரசனையோ அல்லது அரசையோ குறை சொல்லிக் கொண்டு இருந்தார்கள்.

இந்த மக்களுக்கு எப்படி பாடம் புகட்டுவது என்று அரசன் யோசித்தான்.

ஒரு நாள் அனைவரும் நடமாடும் கடை வீதியில் இரவோடு இரவாக ஒரு பெரிய பாறாங்கல்லை வைக்கச் செய்தான். அந்தக்கல் ஒருவரே தூக்கக் கூடியதாகவும் இருந்தது.

மறு நாள் காலை அந்த வழியாக வந்த பலரும் நடுவீதியில் கிடந்த கல்லைத் தாண்டிச் சென்றார்கள்.

என்ன கொடுமை நடு வீதியில் இவ்வளவு பெரிய கல் கிடக்கிறதே. இதை எடுத்து அப்புறப்படுத்த வேண்டும் என்று இந்த அரசனுக்கும் தெரியவில்லை அரசுக் கும் தெரியவில்லை. இப்படி இருந்தால் நாடு எப்படி முன்னேறும்?. என்ற படி முணுமுணுத்துக் கொண்டே சென்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியே ஒரு வாரம் கடந்து விட்டது. அந்தக்கல் மட்டும் அகற்றப்படாமல் கிடந்தது.

அந்த நகரத்து மக்களை எல்லாம் கடை வீதியில் கூடச் சொன்னான் அரசன்.

என்ன நடக்கப்போகிறது என்பதை அறிய மக்களும் அங்கே கூடினார்கள்.

அரசன் வீரன் ஒருவனைப் பார்த்து நடு வீதியில் கிடந்த அந்தக் கல்லைத் தூக்கி ஓரமாகப் போடு என்று கட்டளையிட்டார்.

அப்படியே அந்த வீரனும் கல்லைத் தூக்கினான். அதனடியில் ஒரு பெரிய பெட்டி ஒன்று இருந்தது. அதில் இந்தக் கல்லை எடுத்து ஓரமாகப் போட்டவர்களுக்கு இதிலுள்ள ஆயிரம் பொற்காசுகளும் பரிசு என்று எழுதியிருந்தது.


அங்கிருந்த எல்லோரும் ஆயிரம் பொற்காசுகளை இழந்து விட்டோமே என்று வருந்தினார்கள்.

எதற்கு எடுத்தாலும் அரசைக் குறை கூறுகிறீர்களே நாட்டு மக்களுக்கும் பொதுப் பணி என்கிற சில சேவை மனப்பான்மை இருக்க வேண்டும். அப்படியிருந்தால்தான் நாடு முன்னேறும். என்றான் அரசன்.

தங்களுடைய சோம்பேறித்தனத்திற்காக வெட்கப்பட்ட மக்கள் இனி நாங்கள் அரசைக் குறை சொல்ல மாட்டோம். எங்களால் முடிந்தவற்றை நாங்களே செய்து விடுவோம் என்றார்கள்.

நம்மால் முடிந்ததை நாமே செய்து விட வேண்டும். பிறரை எதிர்பார்த்து காலம் கடத்தக் கூடாது. அப்படி காலம் கடக்கும் போது நமக்கு கிடைக்க வேண்டியது கிடைக்காமல் போய்விடும்.

# உங்களால் முடியும்



மேலே ஏழு பூக்களால் அலங்கரிக்கப்பட்ட கேக் ஒன்றினை பார்த்தீர்களா? அதனை ஏழு துண்டுகளாக்கி உங்களால் பங்கிட முடியுமா? முயன்று பாருங்கள். ஒவ்வொரு துண்டிலும் ஒவ்வொரு பூக்கள் இருக்கவேண்டும். மூன்று நேர்கோடுகளில் மாத்திரமே வெட்டுக்கள் விழவேண்டும்.

விடை 34 ஆம் பக்கத்தில்



## விடுகதைகள் விடைகள்

1. உப்பு
2. புடலங்காய்
3. பலாப்பழம்
4. அன்னாசிப்பழம்
5. நுளம்பு
6. ட
7. வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு
8. தேங்காய்
9. வெங்காயம்
10. ஓடும் - பாயும் நடக்காது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குதிரையை வாங்கிய பரமார்த்த

பரமார்த்த குருவுக்கு ஒரு பணக்காரன் இலவசமாக ஒரு குதிரையைக் கொடுத்தான்.

அந்தக் குதிரையோ கிழடு தட்டிப் போயிருந்தது. ஒரு கண் குருடு ஒரு காது செவிடு முன் கால்களில் ஒன்று நொண்டி! பின் கால்கள் வீங்கிப் போய் இருந்தன.

உடம்பு பூராவும் சொறிபிடித்துப் பார்ப்பதற்கு அசிங்கமாக இருந்தது. இருந்தாலும், பரமார்த்தருக்கும் சீடர்களுக்கும் பரம சந்தோஷம். பணம் செலவு செய்யாமல் இலவசமாகக் கிடைத்ததே! என்று நினைத்தனர்.

"குருவே! கடிவாளம் கட்டுவதற்கு வார் இல்லை. அதனால் வைக்கோல் பிரியைச் சுற்றி விடலாம்!" என்று கூறி அப்படியே செய்தான் மட்டி.

குரு உட்காருவதற்காகக் கிழிந்து போன பழைய கந்தல் சாக்கு ஒன்றை மட்டும் குதிரைமேல் போட்டான். எருக்கம் பூவைப் பறித்து மாலை யாக்கி குதிரையின் கழுத்தில்



**தொந்தியும் தொப்பையுமாய் இருக்கும் பரமார்த்தர் குதிரையின் மேல் பெருமையோடு ஏறி உட்கார்ந்தார். அவ்வளவுதான்!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முட்டாள் அணிவித்தான்.

இவர்கள் செய்வதைப் பார்ப்பதற்கு ஊரே கூடி விட்டது. குதிரைக்கு எல்லா அலங்காரமும் முடிந்தது.

தொந்தியும் தொப்பையுமாய் இருக்கும் பரமார்த்தர் குதிரையின் மேல் பெருமையோடு ஏறி உட்கார்ந்தார். அவ்வளவுதான்!

அவரது பாரத்தைத் தாங்காமல் வலியால் குதிரை அலற ஆரம்பித்தது. கொஞ்சம் கொஞ்சமாய் அப்படியே படுத்தும் விட்டது.

## குரு

"சே சே! இதென்ன சண்டித் தனம் பண்ணுகிறது?" என்று சலித் துக் கொண்டே குரு கீழே இறங்கினார்.

முட்டாளுக்கு ஒரு யோசனை தோன்றியது. கையில் வைத்திருந்த கொள்ளிக் கட்டையைக் கொண்டு போய் குதிரையின் காலில் வைத்தான். உடனே அது விறுக்கென்று உதைத்துக் கொண்டு எழுந்தது. இப்படியும் அப்படியுமாகக் கொஞ்சத் தூரம் ஓடி நின்றது.

அது உதைத்த உதையில் கீழே விழுந்து புரண்ட மட்டிக்கு நாலு பற்கள் உடைந்து விட்டன! வாயெல்லாம் ரத்தம்.

இதை எல்லாம் பார்த்த குருவுக்கு உதறல் எடுத்தது.

"சீடர்களே எனக்குப் பயமாக இருக்கிறது. நான் கீழே இறங்கி விடுகிறேன்!" என்றார்.

"குருவே! நீங்கள் கவலையே பட வேண்டாம். அப்படியே உட்கார்ந்து இருங்கள். நாங்கள் கவனித்துக் கொள்கிறோம்!" என்று முட்டாள் பதில் சொன்னான்.

மண்டுவுக்கும் மடையனுக்கும் வேறு ஒரு யோசனை உதித்தது.

குதிரைக்கு முன்னால் நின்று கொண்டு முகத்தைக் கோணலாக்கி கண்களை உருட்டி உதட்டைப் பிதுக்கி, ஆ....ஊ....ஊ... என்று ஊளையிட்டுப் பயம் காட்டினார்கள்.

இதனால் குதிரை ஒரேயடியாக மிரண்டு, மெல்ல மெல்லப் பின் பக்கமாக நடக்க ஆரம்பித்தது! குருவுக்கும் சீடர்களுக்கும் அதிசயமாகவும், மகிழ்ச்சியாகவும் இருந்தது. சுற்றி இருந்தவர்கள் கைதட்டிச் சிரிக்க ஆரம்பித்தார்கள்.

தொடர்ந்து பின்பக்கமாகவே குதிரை ஓடவும் தொடங்கியது.

"நொண்டிக் குதிரை! நொள்ளைக் குதிரை! குருவுக்கேற்ற குதிரை! கழுதைபோல எட்டி உதைக்கும்! நாயைப் போல் ஆளைக் கடிக்கும்! ஓரம் போங்கோ! வழியை விடுங்கோ!" என்று பாடியபடி சீடர்கள் போய்க் கொண்டு இருந்தனர்.

பின்பக்கமாகவே ஓடுவது குதிரைக்குப் பழகி விட்டது.

அப்போது அடுத்த ஊரின் எல்லை வந்தது. அங்கிருந்த மணியகாரன் இவர்களை நிறுத்தினான்.

"வெளியூர்க் குதிரைக்கு வரி கட்ட வேண்டும். பத்துப் பணம் எடுங்கள்" என்றான்.

"வரியா? நான் ஏறி வருகிற குதிரைக்கு வரி வாங்கலாமா? அதுவும் இது இனாமாகவே வந்த குதிரை இதற்கு வரி கட்ட மாட்டோம்!" என்று கூறினார் குரு.

"எதுவானலும் சரி. வரி கொடுக்காவிட்டால் விடமாட்டேன்" என்று சொல்லி அவர்களை மடக்கினான், மணியகாரன்.

"நாம் கொடாக்கண்டன் என்றால் இவன் விடாக்கண்டனாய் இருக்கிறானே!" என்று நினைத்து ஐந்து பணம் கொடுத்தனர்.

"இன்னும் ஐந்து பணம் கொடுங்கள்"

"ஒரு குதிரைக்கு ஐந்து பணம்தானே வரி?"

"ஒரு பக்கம் மட்டும் போகும் குதிரைக்குத்தான் ஐந்து பணம். உங்கள் குதிரை பின்னாலும் போகிறதே!"

"இதென்ன அநியாயம்?" என்று வருத்தப்பட்டு மேலும் ஐந்து பணம் தந்தனர். "இந்தக் குதிரையால் நமக்கு எவ்வளவு பணம் நஷ்டமாகிறது?" என்று சொன்னபடி பயணத்தைத் தொடர்ந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு வழியாக ஊருக்குள் நுழைந்து ஒரு மடத்துக்குப் போனார்கள். அப்போது இரவு நேரம். எல்லோருக்கும் களைப்பாக இருந்ததால், குதிரையைக் கட்டிப்போட மறந்து, தூங்கி விட்டனர்.காலையில் ஒரு வயலுக்குப் பக்கத்தில் அந்தக் குதிரை கட்டப்பட்டு இருந்தது!

"இது இரவு முழுவதும் என் வயலில் இறங்கி பயிர்களை எல்லாம் நாசம் செய்து விட்டது. அதற்குப் பதிலாகப் பத்துப் பணம் கொடுத்தால் தான் குதிரையை விடுவேன் என்று சொன்னான்," அதைக் கட்டி வைத்திருந்த உழவன்.

அவனிடம் பேரம் பேசி நான்கு பணம் கொடுத்து விட்டுக் குதிரையை ஓட்டி வந்தனர்.

"சீ....சீ....! இந்தக் குதிரையால் நமக்குப் பெரும் தொல்லை. என் மானமே போகிறது..! பேசாமல் இதை விட்டு விடலாம்!" என்று வருத்தப்பட்டார் குரு.

அப்போது அங்கிருந்த ஒருவன் "குதிரைக் குப் பீடை பிடித்துள்ளது. அதனால்தான் இப்படி ஆகிறது. அந்தப் பீடையைக் கழித்து விட்டால் எல்லாம் சரியாகிவிடும். செலவோடு செலவாக எனக்கும் ஐந்து பணம் கொடுங்கள்" என்று யோசனை சொன்னான். குருவும், சீடர்க ளும் மூக்கால் அழுது கொண்டே அவனிடம் பணம் கொடுத்தனர். பிறகு குதிரையின் ஒரு காதைப் பிடித்துக் கொண்டு ஆ! பீடையெல் லாம் இந்தக் காதிலேதான் இருக்கிறது. இதனால் தான் ஏற்கனவே ஒரு காதை அறுத்திருக்கிறார் கள். இப்போது இந்தக் காதையும் அறுத்து விட்டால் சரியாகி விடும்! என்றான், ஏமாற்றுக் காரன்.

உடனே மட்டி மண்ணில் விழுந்து புரண்டு, "சீக்கிரம் காதை அறுங்கள்!" என்று குதித்தான் மூடனோ ஓர் அரிவாளைத் தீட்டிக் கொண்டு வந்து கொடுத்தான்.எல்லோரும் பிடித்துக் கொள்ள ஏமாற்றுக்காரன், குதிரையின் காதை அறுத்து எடுத்தான்! குதிரையோ வலி தாங் காமல் கீழே விழுந்து கதறியது. பிறகு உயிரை விட்டது!

எல்லோரும் அறுத்த காதைக் கொண்டு போய் ஆழக் குழி தோண்டிப் புதைத்தனர். ஒழிந்தது பீடை! இனி மேல் கவலையில்லை! என்றான், ஏமாற்றுக்காரன்.

பரமார்த்த குருவும் சீடர்களும் மகிழ்ச்சி யோடு அடுத்த ஊருக்குப் புறப்பட்டார்கள் •



# ஔவையார் கூறுகிறார்




இவ்வுலகைப் படைத்தவர் ஆண்டவன் என்பதை எல்லா மதங்களும் ஒப்புக் கொள்ளுகின்றன. உலகி லுள்ள மனிதர், மிருகங்கள், பறவைகள், புல் பூண்டு மற்றும் சகல ஜீவராசிகளையும் படைத்தவர் கடவுள். படைத்ததோடு மட்டுமல்ல, எல்லா உயிர்களையும் காப்பவரும் அந்தக் கடவுளே. ஆனால் இவ்வளவு வல்லமை மிக்க கடவுளை நம் கண்களால் காண முடியாது. ஆனால் கடவுளைப்போன்று (உயிர்களை) குழந்தைகளைப் பெற்று உருவாக்கி வளர்த்து வாழ வைப்பவர் யார்? உங்கள் தாயும் தந்தையும் தானே? இவர்களை உங்களால் பார்க்க முடியும். கட வுளைப் போன்று உயிருக்கு உருவம் கொடுத்து உருவாக்கிப் புதிய ஜீவனைத் தோற்றுவிக்கும் பெற் றோர் கண்ணால் காணக் கூடிய தெய்வம். ஒரு குழந்தை முதன் முதலில் பார்த்து புரிந்து கொள்ளக் கூடிய தெய்வமாக விளங்குபவர்கள் தாயும் தந்தையும்.

இதைத்தான் கொன்றை வேந்தன் ஆசிரியரான ஔவையார் இப்படிக் கூறுகிறார்:

**அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.**

**இவ்வாறு பங்கிடலாம் குழந்தைகளே »**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகத்தான மூன்றுகள்

- மதிக்க வேண்டியவை - மூத்தோர், மார்க்கம், சட்டம்.
- நோக்க வேண்டியவை - நேர்மை, தூய்மை, கடின உழைப்பு.
- போற்ற வேண்டியவை - அறிவு, அழகு, பண்பு.
- பேண வேண்டியவை - திருப்தி, தைரியம், மகிழ்ச்சி.
- தவிர்க்க வேண்டியவை - புகைத்தல், சூதாடல், மதுவருந்தல்.
- அடக்க வேண்டியவை - நா, சோதனை, கோபம்.
- பாதுகாக்க வேண்டியவை - வாக்குறுதி, நட்பு, அன்பு.
- அஞ்ச வேண்டியவை - களவு, கொலை, பொய்.
- ஒழிக்க வேண்டியவை - பொறாமை, அநீதி, வாக்குமீறல்.
- போரிட வேண்டியவை - தேசம், உரிமை, கண்ணியம்.
- எதிர்கொள்ள வேண்டியவை - கவலை, பயம், மரணம்.
- கவனிக்க வேண்டியவை - பேச்சு, செயல், எண்ணம்.
- விட்டொழிக்க வேண்டியவை - பொறாமை, பிடிவாதம், தீய எண்ணம்.



◀ வி.சாத்விகா ▶
6 B
யாழ்/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை.

## கறுவா

கறுவா (கருவா)என்பது கறுவா மரத்தின் பட்டை. இம் மரம் இலங்கை, மலையாளக் கரை, கூர்க்கு, மேற்கிந்தியத் தீவுகள், பிரேசில் முதலிய நாடுகளில் பயிரிடப்படுகிறது. இது காட்டு மரமாக வளரும்பொது 20 முதல் 30 அடி உயரும். பட்டைக்காகப் பயிரிடும்போது இது பத்தடிக்கு மேல் வளரவிடப்படுவதில்லை. கறுவா மரத்தின் குருத்து சிவப்பாகவிருக்கும். பின் அது வெண்மை யடைந்த மஞ்சளாக மாறி இருண்ட பச்சை நிறமடையும். ஒன்பது ஆண்டுகளின் பின் மரத்தின் பட்டை உரித்தெடுக் கப்படுகிறது. தாய் மரத்தை வெட்டிய பின் அடியிலிருந்து கூட்டமாக முளைத்தெழும் செடிகளிலிருந்து உரித்தெடுக்கப்படும் பட்டை உயர்ந்த கறுவாவாகும். இம்முளைகள் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை நிலமட்டத்துக்கு வெட்டப்படும். இலவங்கப் பட்டையின் மணமும் கறு வாப் பட்டையின் மணத்தை ஒத்தது. கறுவாவிலிருந்து தைலம் எடுக்கப் படுகிறது. அது மருந்தாகப் பயன்படுகிறது. கறுவா சீரணத்துக்கு நல்ல மருந்தென்று சொல்லப்படுகிறது. கறுவாப் பட்டையைத் தண்ணீரில் ஊறவிட்டு அத்தண்ணீரை வடித்துக் கறுவாத் தைலம் எடுக்கப்படுகிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் கைவண்ணத்தைக் காட்டுங்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வார்த்தை விளையாட்டு

## வார்த்தைகளை உருவாக்குவோம்.



| | | |
|---|---|---|
| வி | ர | வா |
| த | தீ | ப |
| ல் | ம் | க |

மேலே தரப்பட்டுள்ள எழுத்துக்களைக் கொண்டு ஆக்கக்கூடிய அதிக எண்ணிக்கையான அர்த்தமுள்ள சொற்களை உருவாக்கும் அதிஸ்டசாலிகள் மூவருக்கு, அர்ச்சுனா சிறுவர் இதழ்களை இலவசமாக அனுப்பி வைப்போம்.



- முதலாவது அதிஸ்டசாலி - அடுத்துவரும் மூன்று மாத அர்ச்சுனா இதழ்களை இலவசமாகப் பெற்றுக் கொள்வார்.
- இரண்டாவது அதிஸ்டசாலி - அடுத்துவரும் இரண்டு மாத அர்ச்சுனா இதழ்களை இலவசமாகப் பெற்றக் கொள்வார்.
- மூன்றாவது அதிஸ்டசாலி - அடுத்துவரும் ஒரு மாத அர்ச்சுனா இதழினை இலவசமாகப் பெற்றுக் கொள்வார்.

**வார்த்தைகள் யாவும் அழகாக எழுதப்பட்டு, கீழே தரப்பட்டுள்ள அர்ச்சுனா இதழின் முகவரி இடப்பட்ட படிவத்தை இணைத்து 25.10.2011ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கும் வகையில் உங்கள் முகவரியுடன் அனுப்பி வையுங்கள். நீங்கள் கற்கும் பாடசாலையைக் குறிப்பிடத் தவறாதீர்கள்.**

**வார்த்தை விளையாட்டு - I**
**அர்ச்சுனா**
**361, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ ஆங்கிலத்தில் சிவசுப்பிரமணியம்
தமிழில் : ஜெகன்

# தென் - கிழக்கு ஆசியாவில்

### அந்தமான் – நிக்கோபார் தீவுகள்:

இந்து சமுத்திரத்தில் வங்காள விரிகுடாவின் தெற்காக உள்ள அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளில் 40,000ற்கும் அதிகமான தமிழர்கள் வாழ்கின்றனர். இங்கு பெரும்பான்மையினத் தவராகத் தமிழர்களே உள்ளனர். அத்துடன் இங்குள்ள 33பாடசாலைகளில் 6000சிறுவர்கள் கல்வி கற்கின்றார்கள்.

### இந்தோனேசியா

டச் நாட்டுச் செல்வந்தப் பிரபுக்களினால் 1830களில் அவர்களது விவசாயப்பண்ணைகளை கட்டியெழுப்புவதற்காக அந்நேரத்தில் 50,000 பேர்கள் அளவில் தமிழர்கள் இந்தோனேசியா வுக்குக் கூட்டிச் செல்லப்பட்டனர். அவர்கள் அனைவரும் கடின வேலைகளில் ஈடுபடுத் தப்பட்டனர். எனினும், அங்கு நிலவிய கால நிலைமைகள் சாதகமாக அமையாததின் நிமித்தம் பலர் 1940களில் தம்நாடுகளுக்குத் திரும்பிவிட்டனர். இருந்தபோதிலும் 2000 தொடக்கம் 10000 வரையிலானோர் வட சுமாத் திராவில் தங்கிவிட்டனர். அவர்களில் பெரும் பாலானவர்கள் இந்துக்கள். இருப்பினும் கிறீஸ் தவர்களும் மற்றும் இஸ்லாமியர்களும் அவர்கள் மத்தியில் இருந்தனர்.

### சிங்கப்பூர்

சிங்கப்பூரில் 20,0000 பேர்கள் வரையில் தமிழர்கள் உள்ளனர். தமிழர்கள் அங்கு மூன்றாவது பிரதான கலாச்சாரக் குழுவாக விளங்குகின்றனர். தமிழ்ச் சிறுவர்களுக்கு ஆரம் பக்கல்வி முதற்கொண்டு பல்கலைக்கழக நுழைவு வரையில் தமிழ் மொழியினூடாகக் கல்வியூட் டப்படுகின்றது. ஏராளமான ஆலயங்கள் நகர மெங்கும் பரவலாக அமைந்துள்ளன. தமிழர் களின் பண்பாடு, ' கலாசார நடவடிக்கைகள் யாவும் ஆழ்ந்த ஈடுபாட்டுடன் மேற்கொள்ளப் படுகின்றன. அங்குள்ள மின்னியல் மற்றும் அச்சு ஊடகங்கள் உலகம்பூராவும் ரசிகர்களைக் கொண்டுள்ளன. அத்துடன் அவை மிக்க எழுச்சி வாய்ந்தவையாகத் திகழ்கின்றன. அங்குள்ள தமிழர்கள் அதிர்ஸ்டம் பெற்றவர்கள். ஏனெனில் அறிவு, தொழில்நுட்பம், கலாசாரம் மற்றும் ஆக்கத்திறன் போன்றவற்றிற்கான வளங்கள் அங்கு தங்குதடையின்றிக் கிடைக்கும் வசதிக ளுண்டு.

### மலேசியா

சமஸ்டி மலே அரசு என்றழைக்கப்பட்ட காலமாகிய 1901இல் இருந்து மலேசியாவில் 1,060,000 தமிழர்களின் இருந்துள்ளனர். ஆரம் பத்தில் அங்குள்ள இறப்பர் தோட்டங்களில் வேலைசெய்வதற்கு குடியேற்றம் நிகழ்ந்தது. ஆனால் பின்னர் தமிழர்கள் வர்த்தகம் மற்றும் ஏனைய தொழில்களுக்காகவும் பெரும்பாலும் அரசாங்கத்துறைகளான புகையிரத சேவை


மலேசியாவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் பொது கட்டிட வேலைகளுக்காகவும் குடியேறினார்கள்.

1879 இல் முதலாவது தமிழ்ப்பாடசாலை இங்கு அமைந்தது. ஆனால் 1925 இல் இப்பாடசாலைகளின் எண்ணிக்கை 235ஆக அதிகரித்தது அத்துடன் 1999இல் பாடசாலைகளின் தொகை 548ஆக உயர்ச்சியுற்றது. செட்டிநாட்டைச் சேர்ந்த செட்டியார் சமூகத்தினர் அங்கு முக்கியமாக பணம் வட்டிக்கு வழங்குபவர்களாகவும் மொத்த வியாபாரிகளாகவும் விளங்கினார்கள். தொலைக்காட்சிச் சேவைகள் 24மணி நேரமும் சேவைபுரிகின்றன. அச்சு ஊடகமும் எழுச்சியுள்ளதாக விளங்குகின்றது. இந்துக்களின் திருவிழாக்களில் விசேடமாகக் காவடிப்பண்டிகை பிரமாண்ட மாகக் கொண்டாடப்படும். தேசிய அளவில் தொலைவிலிருந்தும் தமிழர்களை இவ்விழாக்கள் ஒன்று திரளச் செய்கின்றன.


இந்தோனேசியாவில்


அந்தமான் – நிக்கோபார் தீவுகளில்

# தமிழர் பரம்பல்

### மியன்மார் (பர்மா)

முன்னொரு காலத்தில் மியன்மாரில் 200000 அளவில் தமிழர்கள் இருந்தனர். ஆனால் 2வது உலகயுத்தத்தின் இறுதியில் இருந்து இவ் வெண்ணிக்கை குறைவடைந்துவிட்டது. அங்கு 32 நகரங்களில் உள்ள தண்டாயுதபாணி ஆலயங்கள், இயங்கிக்கொண்டிருக்கும். 50 ஆரம்பத் தமிழ் பாடசாலைகள் மக்கள் விநியோகத்திலுள்ள ரசிக ரஞ்சனி, தொண்டன் ஆகிய இரண்டு தமிழ்ச் செய்திப் பத்திரிகைகளின் வெளிவருகை என்பவற்றின் மூலம் அங்குள்ள தமிழ்ச்சமூகத்தின் செல்வந்தச் செழிப்பினை கணிப்பிடமுடியும் 1966களில் இருந்து அவ்விரு பத்திரிகைகளும் தடைசெய்யப்பட்டன. வர்த்தகம் மற்றும் ஏற்றுமதி வாணிபத்தில் ஈடுபட்டிருந்த நாட்டுக்கோட்டை செட்டிமார்களினால் அவர்கள் ஆதிக்கம் செலுத்தப்பட்டனர். ரங்கூனில் உள்ள பண்பாட்டுப் பல்கலைக் கழகம் தமிழ்ச் கலாசாரத்தை மேம்படுத்துகின்றது.


### வியட்நாம்

வியட்நாமில் 3000 பேர்கள் அளவில் ஒரு சிறு தொகையினரான தமிழர்களே அங்குள்ளனர். அவர்களுள் அநேகர். கோசிமின் நகரில் வாழ்கின்றனர். எனினும் அவர்களின் வழிபாட்டிற்கென அங்குள்ளது ஒரேயொரு தண்டாயுத பாணிக்குரிய ஆலயமாகும்.

### கம்போடியா, சீனா, தாய்லாந்து

கம்போடியாவில் 1000 தமிழர்களும், சீனாவில் 5000 தமிழர்களும் அத்துடன் தாய்லாந்தில் 10,000 தமிழர்களும் உள்ளனர்.




பர்மாவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# எறும் உறவும் போல்.....!





ஒரு கிராமத்தில் ஒரு எறும்பு இருந்தது. அதற்கு மிகுந்த உடல் வலிமை இருப்பதாக, மற்ற எறும்புகள் பேசிக்கொண்டன. அதனால் அதற்கு ஓகோ என்று புகழ்தேட ஆசை வந்தது.

ஒரு நாள், நகரச் சந்தைக்குப் போகும் வண்டியில் தொற்றிக் கொண்டு சந்தையைச் சென்றடைந்தது. ஒரு காய்ந்த சருகு இலையில் ஏறி அங்கிருந்து 'தொபுக்கடீர்' என்று தரையில் குதித்தது. இப்படி மீண்டும் மீண்டும் குதித்துக் காட்டியது.



சந்தைக்கு வந்திருந்தவர்கள் யாருமே இதைக் கவனிக்கவில்லை. குதித்துக் குதித்து களைத்துப்போன எறும்பு பக்கத்தில் படுத்துக் கிடந்த நாயிடம் விரக்தியோடு பேசியது. சே, என்ன ஊர் இது! பிறரின் அறிவ்வையும் திறமையையும் மதிக்கும் புத்தி இவர்களுக்கு இல்லையே. வந்து பார், நான் இருக்கும் எறும்புப் புற்றில் என்னைப் பாராட்டாதவர்களே கிடையாது என்று கூறி விட்டு ஊருக்குத் திரும்பியது. தனது உறவுகளுக்கு முன்னால் அது உயர்ந்து நின்றது.



## மி து ல் நி நி ர் ந் ணி து து ந் ல் செ

நான்கு சொற்களைக் கொண்ட ஒரு சொற்றொடரின் 13 எழுத்துக்களும் மேலே ஒழுங்கின்றித் தரப்பட்டுள்ளது. அச்சொற்றொடரை எழுதி அனுப்பிப் பரிசுகளை வெற்றிகொள்ளுங்கள். அதிஸ்டசாலிகள் மூவருக்கு சிறந்த புத்தகப் பரிசில்கள் வழங்கப்படும்.

25.09.2011ந் திகதிக்கு முன்னர் கீழ் உள்ள முகவரிக்கு உங்கள் ஆக்கத்தை அனுப்பி வையுங்கள்.

அர்ச்சுனா,
இல361 கஸ்தூர்ரியார் வீதி,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு பென்சில்



சின்னஞ்சிறியதோர் பென்சில் நான்
காரீயம் மரம் கலந்துருவானவன்
நீள் வளர்ந்தும் சிவந்தும் முனையினிற் கூராய்
அழு வழுப்பாக அமைந்ததென் உடல்
ஒரு காலத்தில் நானொரு அழகன்
இப்பொழுதோ.......
கெதியாய் உயிரை விடலாம் போல் உள்ளது.
அழகுறச் சீராய் எழுதுதல் என்பதே
எனக்குப் பிடித்த நல்ல கடமை
எந்தன் எஜமான் ஒரு நாள் கூட
அப்படி எந்தன் தலையைச் சீவுவார்
இரக்கமில்லாமல் இடைக்கிடை வெட்டுவார்.....
விரைவினில்.... நான் இறந்துதான் போவேன்
என்னை வாயில் வைத்துச் சப்புவார்
எனக்கோ அதிலே விருப்பமே இல்லை.
மைக்குப்பியினுள் என்னைத் தோய்ப்பார்....
நீங்களே சொல்லுங்கள்...
எனது முறையீட்டில் ஏதும்
தவறிருக்கிறதா.....?

■ ஆங்கிலமூலம் – அலீந்தியா சப்ளின் (Alethea Chaplin)
தமிழ்ல் – ந.சத்தியபாலன்



# தவறான வழிகள்





- தவறான வழிகள் நீ விரு ...ம்பினதை உனக்கு விரைந்து தரும்
  ஆனால் நீ விரும்பாதவை ...களையும் உனக்கு விரைவில் தரும்
- தவறான வழிகள் உன்னை ...ன விரைவில் உயர்ந்து நிற்க வைக்கும்
  ஆனால் விரைவில் உன் ...னை தலைகுனியவும் வைக்கும்.
- வறான வழிகள் உனக்கு நிறைய லாபங்களைக் கொண்டு வரும்
  ஆனால் அந்த லாபங்கள் உன்னுடைய எதிர்கால சமாதானத்திற்குப் பல
  நஷ்டங்களையும் தரும்.
- தவறான வழிகள் பலரை ...அழ வைத்து உன்னை சிரிக்க வைக்கும்.
  ஆனால் அந்த சிரிப்பே பல ...ர் நடுவில் உன்னை விழவைத்து அழ வைக்கும்.
- தவறான வழிகள் எனை ...ன யாரும் அசைக்க முடியாது என்று எண்ண
  வைக்கும்.
  ஆனால் அந்த எண்ணமே ...ு யாரும் உன்னை தூக்கி நிறுத்த முடியாதபடி
  நிலைகுலைய வைக்கும்.
- தவறான வழிகள் எல்லா ...நியாயங்களையும் மிதித்துக் கொண்டு
  முன்னேற உன்னைத் தூ...ண்டும்.
  ஆனால் அந்த முன்னேற்...றமே ஒருவரும் உன் நியாயத்தை
  மதிக்காதஒரு நாளைக் கா...ணச் செய்யும்.

■ பா. ஆரணன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


1





2




3




4





5




6



7





8







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தாள் ஒன்றில் மீன் ஒன்றை உருவாக்குங்கள்


9




10





11




12



## சிங்கம் ஒன்றை வரைந்து பாருங்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுனாமி வந்தது ஏன்? ஒரு சிறுமியின் கற்பனை

**பல** வருடங்களுக்குப் பின் சிப்பி, முத்து ஒன்றைப் பெற்றெடுத்தது. ஒருநாள் சிப்பிகள் ஒன்று கூடிக் கடல் மத்தியில் கூட்டம் ஒன்றை நடத்தின. அக்கூட்டத்திற்குச் சென்ற அந்தச் சிப்பி தனது முத்தைப் பொந்தினுள் மறைத்து வைத்து விட்டு சென்றது. மனிதர்களோ பல வழிகளில் உழைப்பவர்கள். அவர்களிற் சிலர் கடற்பொருட்களை சேகரித்து விற்பவர்கள்.

அப்படி வந்தவர்களில் சிலர் பொந்தினுள் கையை விட்டுப் பார்த்தனர். அவர்களின் கைகளில் சிப்பி வைத்துச் சென்ற முத்துத் தட்டுப்பட்டது. அதனை எடுத்துப் பார்த்த அவர்கள் மகிழ்ச்சியுடன் அதைக் கொண்டு சென்றனர். பொந்திற்குள் மீண்டும் வந்து பார்த்த அந்தச் சிப்பி பொந்திற்குள் முத்தைக் காணாது மிகுந்த வேதனை அடைந்தது. அழுது கண்ணீர் வடித்த படியே கடல் இராஜாவிடம் சென்று முறையிட்டது.





சிப்பியின் முறைப்பாட்டைக் கேட்ட இராஜா, அலைகளை அழைத்துக் களவு போன முத்தைத் தேடும்படி உத்தரவிட்டது. ஒவ்வொரு அலைகளும் கடலெங்கும் தேடி வந்தும் முத்தைக் காணவில்லை என்றே கூறின. இதைக் கேட்ட சிப்பி கதறி அழுதது. புலம்பியது. தாய்ச்சிப்பி படும் துன்பத்தைப் பார்த்த கடல் இராஜா பெரிய அலைகளை அழைத்து ஊருக்குள் தேடிச் செல்லுமாறு அவற்றுக்கு உத்தரவு பிறப்பித்தது.

அதனைக் கேட்ட அலைகள் பெரும் சீற்றத்துடன் கரையேறி முத்தைத் தேடின. முத்தைத் தேடிப் புறப்பட்ட அலைகளோ சுனாமியாக உயர்ந்தன. ஊருக்குள் தேடுவதற்காக சீற்றத்துடன் வந்த அலைகள் தரையில் சேதங்களை ஏற்படுத்திச் சென்றன. "சுனாமி" என அழைக்கப்படும் பேரலைகள். அலைகளே!

■ றெ.டொறினா
தரம்-09
யா புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம்
புங்குடுதீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் பாடல்



பட்டுப் போல சட்டை போட்ட
பாடசாலைப் பாலர் நாம்
பட்டாம் பூச்சிகள் போலாகி
பாரினைச் சுற்றி வலம் வருவோம்.

கோள வடிவ பூமியிலே
கோழைகளாய் வாழாது – பல
கோணத்தில் சிந்தித்து சிறப்பாய்
உலகில் வலம் வருவோம்.

நாளைய உலகம் நமதாகும்
தயக்கம் வேண்டாம் தங்கையரே!
தங்கமான தரணியினை அங்கவீனம் ஆக்காது
அழகாய்ப் போற்றிப் பேணிடுவோம்

அழிந்து செல்லும் இயற்கையினை
இயன்ற வரை பேணிடுவோம்.
இன்றே ஒன்று கூடுவோம்
இனிமேல் இல்லை பகையென்று

■ நிவேதிதா

ARCHUNA அர்ச்சுனா சிறுவர்களுக்கான மாத இதழ் வின்

## புதிய அங்கத்தவர்



சிவகுமார் ஹெரிஹரன்
தரம் : 2C
யாழ் இந்து ஆரம்ப பாடசாலை

அங்கத்தவர் இலக்கம் – 03

## பாராட்டுக்கள்



**க. தர்சனா**
யா/இந்து ஆரம்ப பாடசாலை

புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த
அர்ச்சுனா வாசகிக்கு எமது பாராட்டுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் கைவண்ணங்கள்





க. கபிலன்
யா/ நல்லூர் சென் பெனடிற்
றோ.க.த.க பாடசாலை



கு. திவேதிகா
யா / அரியாலை
ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ர. சஞ்ஜெயன்
தரம் . 08
யாழ் மத்திய கல்லூரி



எ. கனிஎழில்
தரம் . 2A
ஏஞ்சல் சர்வதேச பாடசாலை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1 ஆவது படத்திலிருந்து 2 ஆவது படம் ஐந்து விடயத்தில் வித்தியாசமாக உள்ளது. அவற்றினை கண்டுபிடியுங்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








உறுதி • நவீன வடிவங்கள் • அழகிய நிறங்கள்

## லக்சுமி ஓகனைஷேசன்

**Lukshmee Organization**

(வட மாகாண ஏக விநியோகஸ்தர்)

இல. 25, 4ம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். தொடர்பு : 021 222 7167


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




'அர்ச்சுனா' இதழ் உதயன் வெளியீட்டகத்தினரால் [illegible] கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org